Chundikuli Branch Library
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆனி 29 ஷவ்வல் 24 இதழ் 153
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 13-7-1985

# ஈழம் கோரிக்கையை கைவிட்டு பேச்சுவார்த்தைக்குவரவில்லை

## தீவிரவாதக் குழுக்கள் உணர்த்தியுள்ளன

(கொழும்பு)

ஈழம் கோரிக்கையைக் கைவிட்டோ அல்லது ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டோ தாம் பூட்டான் பேச்சுவார்த்தைகளுக்கு வரவில்லை என்ற தமது பொதுவான நிலையைத் தீவிரவாதக் குழுக்கள் பூட்டான் மாநாட்டில் உணர்த்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்திடம் இருந்து புதிய, திருப்திதரக்கூடிய ஆலோசனைகளை எதிர்பார்த்தே இங்குவந்துள்ளோம். தமிழ் மக்களின் விருப்பங்களை பூர்த்திசெய்யும் வகையில் இந்தப் புதிய ஆலோசனைகள் புதியனவாகவும், முழுமையான பலனைத்தரக்கூடியதாகவும் இருக்கவேண்டும் என்பதனையும் தீவிரவாதக்குழுக்கள் உணர்த்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை பூட்டான் மாநாட்டின் 2-ம் நாள் பேச்சுவார்த்தையின்போது இலங்கை இராணுவத்தினரின் போர்நிறுத்த மீறல்கள் குறித்து தீவிரவாதக் குழுக்க

(7-ம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டால் பூட்டான் மாநாட்டில் ஜே. ஆர். பங்குபற்றுவார்

(கொழும்பு)

பூட்டான் தலைநகர் திம்புவில் நடைபெறும் இலங்கை இனப்பிரச்னை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் தொடர்ச்சியான முன்னேற்றம் காணப்படுமானல் இந்த மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் கலந்து கொள்வார்.

இத்தகவலினை இலங்கைக் குழுவுக்கு தலைமை தாங்கும் திரு எச். டபிள்யூ. ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் தமிழ் அமைப்புக்கள் சார்பில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை திம்புவில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் விபரங்கள் ஒரு அறிக்கையாக தாயரிக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கையை தயாரிப்பதற்கு 8 பேர் கொண்ட கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த எட்டுப்பேரில் ஐவர் இலங்கை அரசாங்க

(7ம் பக்கம் பார்க்க)

### கொழும்பு குண்டுச் சம்பவத்தினால்

# இலங்கை குழு பூட்டான் பேச்சிலிருந்து விலகாது

(கொழும்பு)

**கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வெடிகுண்டுச் சம்பவத்தின் காரணமாக பூட்டான் பேச்சுவார்த்தைகளில் இருந்து இலங்கைக் குழுவினர் வெளியேறமாட்டார்கள் என்று இலங்கை அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

இச்சம்பவம் காரணமாக இலங்கை அரசு பேச்சுவார்த்தைகளை நிறுத்திவிடாமல் தொடர்ந்து நடாத்தி இப்பிரச்னைக்குத் தீர்வு காண முயற்சிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை பூட்டான் மாநாட்டில் இடம்பெற்ற பேச்சுக்களின் விபரங்களையும், பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட முட்டுக்கட்டை நிலைமைகளையும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு விளக்குவதற்காக இலங்கைத் தூதுக் குழுவின் தலைவர் திரு. எச் டபிள்யூ ஜெயவர்த்தன நேற்று இலங்கை வந்துள்ளார்.

பூட்டான் மாநாட்டில் இலங்கை அரசின் சார்பில் முன் வைக்கப்பட்ட இனப்பிரச்னைக்கான ஆலோசனைகளை தமிழ் அமைப்புகளின் சார்பில் கலந்து கொண்டவர்கள் முற்றாக நிராகரித்தமையைத் தொடர்ந்து இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் திரு ரமேஸ்பண்டாரி பூட்டான் சென்றுள்ளார்.

7ம் பக்கம் பார்க்க)

## இந்திய ஜனாதிபதியின் செய்தி

(புதுடில்லி)

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை கொலைசெய்ய முயற்சித்த சம்பவம் தொடர்பாக இந்திய ஜனாதிபதி திரு ஞானி செயில் சிங் அதிர்ச்சியும், கவலையும் அடைந்துள்ளார்.

இது தொடர்பாக இந்திய ஜனாதிபதி இலங்கை ஜனாதிபதிக்கு தனிப்பட்ட செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

[7-ம் பக்கம் பார்க்க]

### குண்டு வெடித்தால்—

# கொழும்பின் மத்தியபகுதி முற்றாக சேதமாகியிருக்கும்

## லங்கா 'புவத்' செய்தி

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்துக்கு நேற்றுமுன்தினம் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு திட்டமிட்டபடி வெடிக்கப்பட்டிருந்தால் கொழும்பு மத்திய பகுதி முழுவதும் பெரும் சேதத்துக்குள்ளாகியிருக்கும் என்று வெடிகுண்டு நிபுணர்கள் கூறியிருப்பதாக 'லங்கா புவத்' கூறியுள்ளது.

ஜனாதிபதி செயலகத்துடன் அதற்கு அருகிலுள்ள ஐந்து ஹோட்டல்கள், மத்திய வங்கி அலுவலகம், இந்திய தூதுவராலயம், விமானப்போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவையும் சேதமாக்கப்பட்டிருக்கும் என்றும் அது தெரிவித்துள்ளது. (ரா)

# கொட்டாஞ்சேனைபகுதியில் பொலிஸார் சோதனை

(கொழும்பு)

நேற்றுமுன்தினம் கொட்டாஞ்சேனையில் அகப்பட்ட குண்டுச்சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினமிரவு 3 மணியிருந்து நேற்று அதிகாலை 7 மணிவரை கொட்டாஞ்சேனைப் பகுதியில் பொலிசார் வீடு வீடாகச் சென்று கடும்

[7-ம் பக்கம் பார்க்க]

# இலங்கைப் பிரச்னையை வடகொரியா தூண்டுகிறது

## ரீகன் குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

இலங்கையில் பிரிவினைவாத வன்செயல்களை ஏற்படுத்துவதில் வடகொரியா ஈடுபட்டு வருகிறது, என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ரொனல்ட் ரீகன் குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் சட்டத்தரணிகள் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி ரீகன் இவ்வாறு வட கோரியா மீது கண்டனம் தெரிவித்தார்.

(7-ம் பக்கம் பார்க்க)

# 643 தமிழ் இளைஞர்களை விடுவிக்க உத்தரவு

## யாழ். அரச அதிபருக்கு அமைச்சர் லலித் தகவல்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களில் 643 பேரை விடுதலை செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி யாழ் அரசாங்க அதிபருக்கு தெரிவித்துள்ளார்.

தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்படுவார்கள் என அரசாங்கம் அறிவித்தமையைத் தொடர்ந்து அந்த இளைஞர்களின் பெற்றோர்கள் பலர் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்துடன் தொடர்புகொண்டு விசாரித்தனர். இதனையடுத்து அரசாங்க அதிபர் அமைச்சர் லலித்துடன் நேற்றுத் தொடர்பு கொண்டபோது 643 பேரை விடுவிப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இது குறித்து தாம் பூஸா முகாம் இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டபோது இது தொடர்பான உத்தரவு இதுவரை தங்களுக்குக் கிடைக்கவில்லையென்றும் அந்த உத்தரவைத் தாம் எதிர்பார்த்துக்கொண்டு இருப்பதாகவும்

(7ம் பக்கம் பார்க்க)

# நிர்வாணமாகவைத்து என்னை கடுமையாகத் தாக்கினர்கள்

## பிதா சிங்கராயர் சாட்சியம்

(கொழும்பு)

ஒருநாள் இரவு மூட்டைப் பூச்சியுள்ள கதிரையில் என்னை இருக்குமாறு பணித்தபோது நான் மறுத்து கீழே இருந்துவிட்டேன் இதற்காக என்னை ஒருவீரர் நிர்வாணமாக்கி விட்டு கடுமையாக தாக்கினர். அந்த வீரரைவிட இன்ஸ்பெக்டர் கால்லகே மோசமானவர்.

வணபிதா ஆபரணம் சிங்கராயர் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் வழக்கில் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவரது சாட்சியத்தை சிரேஷ்ட சட்டத்தரணி பாலா தம்பு நெறிப்படுத்தினர்.

வணசிங்கராயர் மேலும் கூறியதாவது எனது அறையில் இருந்து 10 கடிதங்கள் கண்டு எடுக்கப்பட்டன. அவற்றில் 4 கடிதங்களை மாத்திரம் என்னிடம் கொடுத்து அவற்றை மொழிபெயர்க்கு

(7-ம் பக்கம் பார்க்க)

# அசூளம்பரம்

## விற்பனைக்கு

Shetna Farm"B-380 சேவற் குஞ்சுகள் 13 ம் திகதி சனிக் கிழமை விநியோகிக்கப்படும் சற்குணராசா பிறதர்ஸ், பிரம் படி, கொக்குவில். 4324

கால் நடைகளுக்கு உகந்த பெக்கூட்ரின் பவுடர் (Pecutrin pd ) மொத்த விலை-7-50. சில்லறை விலை - 8-50 தொடர்பு கொள்க: M G M Forage Stores, 781, K K S Rd and 208, 1st Cross Street, Jaffna. 4289

ஊர்காவற்றுறை, நாரந் தனை வடக்கு, அம்பலவாரி ஒழுங்கைக்கு அண்மை யில் (வடக்கு ரோட்டிலிருந்து 300யார்) 10பரப்பு மேட்டுக் காணியும் 40 பரப்பு வயற் காணியும், வேலணை வடக்கு. மயிலப்புலம் ஐயனார் கோவி லுக்கண்மையில் 18 பரப்பு வயற்காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; க. நடராஜா. சின்னமூளாயடி, வேலணை ரோட், கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை. 4398

கரம்பன் கிழக்கில், செம் மண்கலட்டி, நெ. ப 8. வீடு கட்டக்கூடியது. விற்பனைக்கு. உடன் கீழ்க்காணும் விலாசத் துடன் தொடர்பு கொள்க. இ பொன்னுத்துரை, பாலா பான்சிகவுஸ், ஊர்காவற் றுறை. 4406

காரைநகரில் சிறிதுகாலம் பாவித்த வீட்டு நிலைகள், கதவுகள். யன்னல்கள், யன்னல் கதவுகள், பனை மரங்கள், தீராந்திகள், நெல்லுப்பத்தாயம், பீப்பா வண்டில், மாட்டுத்தொழுவம் முதலியன விற்பனைக்குண்டு தொடர்பு: சி, இராசரத்தி னம், 150, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 4399

சண்டிலிப்பாய் நடுக்குறிச்சி [மகாவித்தியாலயத்துக்கு அண்மையில்] வீடு, கிணறுடன் கூடிய ஆறுபரப்புக் காணி விற் பனைக்கு உண்டு. முழு விபரங் களையும் வார நாட்களில் எமது அலுவலகத்தில் பெற வும். கொம்பனி சுருக்கை நிறைவேற்றுவதற்காக விற் பனை துரிதப்படுத்தப்பட வேண்டியுள்ளது. சுருக்காளர், மல்சி ஆயுள் இன்சூரன்ஸ் கொ-லிற் [சுருக்கில்], இரண் டாம் மாடி, 166, ஆஸ்பத்திரி வீதி, [ஏ எஸ். சங்கரப்பிள்ளை கட்டிடம்), யாழ்ப்பாணம். 4388

டெமி காவ் சைஸ் பிளேட் டன் பிறிண்டிங் மெசின் (விக் ரோறியா மொடல்) காலால் இயக்கக் கூடிய ஸ்ரேப் ளர் மெஷின் [அப்பியா சக்கொப்பி கட்டுபவர் களுக்கு உகந்தது] விற் பனைக்குண்டு ஈகிள் அச்சகம், 161, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 4394

நல்ல நிலையில் வீட்டுத் தளபாடங்கள், மின் உபகர ணங்கள், ஆடைகள் (ஆண் பெண்], குளிர்சாதனப் பெட்டி, தட்டெழுத்து இயந்தி ரம் (ஆங்கிலம்) வேறுசில சாமான்களும் குறைந்த விலை யில் விற்பனைக்குண்டு. ஒவ் வொரு கனி, ஞாயிறு உட் பட மற்றநாட்களிலும் பார் வையிடலாம். 1, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர், 4400

நான்கு மாதங்களே மிகக் கவனமாகப் பாவிக்கப்பட்ட ஏசியா பைக் (ஆண்களின்) விற்பனைக்குண்டு. 161, பிற வுண் வீதியில் பிற்பகல் 4 - 6 மணிக்கிடையில் பார்வையிட லாம். 4343

## தேவை

சிறுபண்ணையில் வேலை செய்வ வதற்கு நேர்மையான ஒரு வேலையாள் அல்லது ஒரு சிறு குடும்பம், உடன் தேவை. அகதிகளுக்கு முன்னுரிமை யுண்டு. பாம் ஹவுஸ், கோட் ரோட், மல்லாகம். 4330

லேடீஸ் பைசிக்கிளும் வேறு சிறிய பைசிக்கிளும் விலைக்குத் தேவை. கடிதத் தொடர்பு விலாசம்: இரத்தினம், 473/2 காங்கேசன்துறை வீதி, யாழ்ப் பாணம். 4404

மேசை மணிக்கூடுகள், சுவர் மணிக்கூடுகள் கைக்கடிகாரங் கள், திருத்துவதில் அனுபவம் உள்ளவர்கள் உடன் வரவும். தங்குமிடவசதி இலவசம், 44, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பா ணம். 4385

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் க பொ. த, உயர் தர வகுப்புகளில் வர்த்தகம் கணக்கியல் அளவையியல் ஆகிய பாடங்கள் கற்பிப்ப தற்கு வசதிக்கட்டண ஆசிரி யர் தேவை. உடன்விண்ணப் பிக்கவும் பட்டதாரிகள் விரும் பத்தக்கது. அதிபர். 4393

யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு வியாபார அனுபவமுள்ள விற்பனையாளர்கள் உடன் (Counter Clerks] தேவை (ஆண்கள் மட்டும்). க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்தவராயும், ஆங் கில அறிவுஉடையவராயும் முன்வேலை செய்த அனுபவத் துடனும், வயது எல்லை 20-40 வயதுக்குட்பட்டவராயும் இருத்தல் வேண்டும். விண் ணப்பங்களை சொந்த கை எழுத்து மூலம் 18-07-85க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 4381, மே/பா, ஈழநாடு, யாழ்ப் பாணம், 4381

## மணப்பந்தல்

கல்வி, உயர்குலம், வீட்டு டன் சீதன வசதி ஒருங்மைந்த 34 வயது பெண்ணுக்கு தகுதி யுடைய, உத்தியோகம் வகிக் கும் நற்பழக்கங்களுடைய மணமகன் தேவை. தொடர்பு:- 43, நெல்லியடி வீதி, கோணமலை, கொக்கு வில். 4345

இங்கிலாந்தில் படித்து பட்டதாரியாகி அங்கே வேலை பார்க்கும் 28 வயது நிரம்பிய மிகவும்அழகான தமிழ், இந்து. வேளாள மணமகளுக்கு இங்கி லாந்தில் வசிக்கும்/வேலைபார்க் கும் இந்து வேளாள மண மகன் தேவை. டாக்டர் கணக்காளர், எஞ்சினியர் விரும்பத்தக்கது - சாதகக் குறிப்பு மறு விபரங்கள்: 4318 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம் 4318

யாழ்ப்பாண இந்து உயர் குல படித்த, மேற்கு ஜேர்ம னியில் நல்ல வருமானத் தோடு வேலைசெய்யும் மண மகனுக்கு 24 வயதுக்குட்பட்ட 4-1-5-6 பிறப்பெண்ணுள்ள மணப்பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். மணப் பெண் உடனே புறப்படலாம். சாதி, மதம் கவனிக்கப்பட மாட்டாது. ஞாயிற்றுக்கிழ மைகளில் நேரில் சந்திக்க லாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப் பாணம். 4342

## தேவை

எமது தொழிற்சாலையில் ஊதுபத்தி தயாரிக்க பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். எஸ் சுப்பிரமணியம், and கொம்பனி, 34. ஆடிய பாதம்வீதி, நல்லூர், யாழ்ப் பாணம். 4357

## பயிற்சி வகுப்பு

மருத்துவ தாதி பயிற்சி (Nurse Training Diploma Course) ஆரம்பமாகவுள்ளது. G. C. E. O/L, A/L சித்தி யடைந்தவர்கள் 20-7-85க்கு முன் விண்ணப்பிக்கவும். அதி பர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 4321

## வகுப்புகள்

A/L 86, 87 புவியியல், இந்து நாகரிகம் வகுப்புகள் 7 முதல் 10 வரை தமிழ், ஆங்கி லம், சமூகக்கல்வி ஆகியபாடங் களில். விபரங்களுக்கு:- "லட் சுமி வாசம்" 153, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. 4370

## சேவை

நாட்பட்ட எவ்வருத்தமா னாலும் விசேஷ வைத்திய நிபு ணர்களால் கைவிடப்பட்ட எவ்வித நோய்களானாலும் இறைவனின் அருளால் குண மாக்குவோம். உங்களின் எவ் விதமான தனிப்பட்ட வைத்தி யப் பிரச்னைகளுக்கும் வெளி நாடுகளில் பிரபல்யம் மிக்க வர் இலவச ஆலோசனை வழங்குவார். அத்துடன் மனிதசக்தியால் குணப்படுத்த முடியாத சகலவிதமான தோஷங்களையும், பிணிகளை யும் நீக்கிக் கொள்ள இயந்தி திரத்தகடுகள் துவாக்கள் செய்து கொடுக்கப்படும். "சாஹிஷீபா" ஆத்ம ஆத்ம ஆரோக்கிய நிலையம், 125, கடற்கரைவீதி, (பழைய பொலிஸ் நிலையத்திற்கு அரு காமையில்) குருநகர், யாழ்ப் பாணம். 4380

**A/L 87**

சனி, ஞாயிறு, வகுப்பு

7-15: பிரயோககணிதம்

8-30: தூயகணிதம்

ஆரம்பம்: யூலை 14

**Ravimohan**
JAFFNA
[வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்]
4263

## கர்ப்பிணிப்பெண் கிணற்றில்விழுந்து மரணம்

(மாவிட்டபுரம்)

ஒரு மாதக்கர்ப்பிணி பெண் ஒருவர்கிணற்றில்தவறிவீழ்ந்து பரிதாபமாக மரணமானூர்.

காரைநகரைச் சேர்ந்த தன பாலசிங்கம் இராசகுமாரி (26 வயது) என்பவரே இவ் வாறு மரணமானூர்.

காலமானவருக்கு வலிப்பு நோய் இருந்து வந்ததாகவும் சம்பவதினம் கிணற்றில் தண் ணீர் அள்ளும்போது வலிப்பு நோய் ஏற்பட்டதால் கிணற் றில் தவறிவீழ்ந்ததாகவும் சாட்சியங்களில் தெரிவிக்கப் பட்டது.

தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ் கதிரவேற்பிள்ளை பிரேத பரி சோதனை நடத்தி சாட்சிய ளித்தார். திடீர் மரண விசா ரணை அதிகாரி திரு. கா. தம்பிராசா விபத்து மரணம் எனதீர்ப்பு வழங்குனர்.

**Sakura Photo Suppliers**

233/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நவீன முறையில் கொம்பியூட்டர் மூலம் எல்லா வகையான கலர் பிலிம் சுருள்களும் பிறிண்ட் செய்து ஒரு கிழமையில் கொடுக்கப்படும்.

Developing- இலவசம். P. C. 5-50

4369

## அறிவித்தல்

என்னிடம் வெளிநாட்டுப் பிரயாணத்திற்கு என பாஸ்போட் தந்தவர்கள் 13-7-1985, 14-7-1985 பிற்பகல் 2-00 மணிக்குமுன் சந்திக்கும்படி அவசர மாக வேண்டுகின்றேன். புதியவர்களும் சந்திக்கலாம். பாஸ்போட்டுடன் வரவும். இது அவசர வேண்டுதல்.

அ. மகேந்திரன்,
இல. 155, குருசோ வீதி,
சுண்டுக்குளி - யாழ்ப்பாணம்.
(4413)

## அறிவித்தல்

"ஸ்டொப்" கிளட்ச் AND பிறேக் புளூய்ட்"

மேற்படி பொருளின் சரியான விலைகள்: 450 மி லீ. ரூபா. 28/25, 250 மி லீ ரூபா. 16/45 ஆகுமென்ப தையும், எமது முன்னைய விளம்பரத்தில் காட்டியுள்ள விலைகள் 450 மி லீ ரூபா 27/25, 250 மி லீ ரூபா 15/45 பிழையானது என்பதையும் விற்பனையாளருக் கும் பாவனையாளருக்கும் இத்தால் தெரியத்தருகிறோம்.

கெமனெக்ஸ் லிமிட்டெட்
தயாரிப்பாளர்கள்.
4403

"ஸ்டொப்" கிளட்ச் & பிறேக் புளூயிட்

மலிவான விலைக்கு
போதியளவு
பெற்றுக்கொள்ளலாம்

STOP
Hydraulic
BRAKE
& CLUTCH
FLUID

விநியோகஸ்தர்கள்:-
டீமோ இன்டஸ்றீஸ்
லிமிடெட்
65, ஜேத்தவன வீதி,
கொழும்பு - 14.
தொலைபேசி:23702 4, 34751




தயாரிப்பு:
CHEMANEX
கெமனெக்ஸ் லிமிட்டெட்

450 மிலி - ரூ. 28/25
250 மிலி - ரூ. 16/45

## விவாஹ விஞ்ஞாபனம்

நிகழும் மங்களகரமான குரோதன ஹ ஆனி மீ 30-ம் நாள் (14-7-85 ஞாயிற்றுக்கிழமையும் ரோகிணி நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய பகல் 11-00 மணி முதல் 12-15 வரையுள்ள சிங்கலக்ன சுபமுகூர்த்தத்தில்

| அளவெட்டி | அரியாலை |
|---|---|
| சிவஸ்ரீ | சிவஸ்ரீ |
| சோ. இராமலிங்கஐயர் | கு பாலசுப்பிரமணியக் |
| தம்பதிகளின் | குருக்கள் தம்பதிகளின் |
| கனிஷ்ட புத்திரன் | புத்திரி |
| சூரியப் பிரபாகர சர்மா | பாலகௌரி |
| அவர்கட்கும் | அவர்கட்கும் |

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரகண விவாகஞ் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் மணமகளில்லத்தில் நடைபெறும் மேற்படி முகூர்த்தத்திற்கு இஷ்டமித்திர குடும்ப சமேதராய் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

★ சமாவர்த்தனம்:- மணமகன் இல்லத்தில் ஞாயிறு காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

★ அன்று (14-7 85) மாலை 4-00 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

★ வரவேற்புபசாரம்:- மணமகன் இல்லத்தில் திங்கள் மாலை 4-00 மணிக்கு நடைபெறும்.

இங்ஙனம்

சிவஸ்ரீ சோ. வெங்கடேஸ்வரக் குருக்கள் தம்பதிகள்
சிவஸ்ரீ சோ. இராமலிங்க ஐயர் குடும்பத்தினர்
கும்பளாவளைப் பிள்ளையார் கோவில்—அளவெட்டி.

சிவஸ்ரீ கு. பாலசுப்பிரமணியக் குருக்கள்
குடும்பத்தினர் (ஆசிரியர்)
ஞானவைரவர் கோவில்—அரியாலை. 4396

# குவைத்தில் குண்டுவெடி! 13பேர் பலி, 100பேர் காயம்!!

**புதுடில்லி, ஜூலை 12**

**குவைத்தில் இடம்பெற்ற இருபெரும் குண்டு வெடிப்புக்களில் 13 பேர் கொல்லப்பட்டனர். சுமார் 100 பேர் வரை காயமடைந்தனர். இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது.**

பொதுமக்கள் நிரம்பியிருந்த இரு கட்டிடங்களிலேயே இக் குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழ்ந்ததெனத் தெரிவிக்கப்பட்டது

இச்சம்பவத்தையடுத்து குவைத் மந்திரிசபை உடனடியாகக் கூடி பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தது

குவைத்திலிருந்து புறப்பட்டுச் செல்லவிருந்த அனைத்து விமானச்சேவைகளும் நேற்று இக் குண்டுவெடிப்பையடுத்து உடனடியாக நிறுத்தப்பட்டன

குவைத் தேசிய சட்டசபை கட்டிடத்தினுள்ளும் வெடிகுண்டுவைக்கப்பட்டிருப்பதாக நேற்று எச்சரிக்கையொன்று விடுக்கப்பட்டது. ஆனால் அக் கட்டிடம் தீவிரமாக சோதனையிடப்பட்டபோது அதனுள் வெடிகுண்டுகள் எதுவும் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இக் குண்டு வெடிப்புச்சம்பவம் தொடர்பாக எந்த ஒரு அமைப்பும் இதுவரை உரிமை கோரவில்லை. (ி)

## ராஜீவ் தமிழகம் வருகிறார்

(சென்னை)

எதிர்வரும் திங்கட்கிழமை இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இந்திய தேசியகாங்கிரஸின் நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டத்தில் பங்கு பற்ற தமிழகம் வருகிறார்

அன்று மாலை அவர் சென்னையில் பெரும் ஊர்வலமொன்றைப் பார்வையிடுவார். இரவு 7 மணிக்கு சென்னை பீச் கடற்கரையில் பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொள்வார் தொடர்ந்து அன்றிரவு எட்டு மணிக்கே அவர் மீண்டும் புதுடில்லி பயணமாவார். (ி)

## "போதைவஸ்த்துக்கு எதிராக தகுந்த போராட்டம் நடத்தப்பட வேண்டும்!
### — ஜோர்ஜ் ஷுல்ஸ்

கோலாலம்பூர், ஜூலை 12

"உலகில் போதைவஸ்துப் பாவனைக்கு எதிராக தகுந்த போராட்டம் நடத்தப்பட வேண்டும்" என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு. ஜோர்ஜ் ஷுல்ஸ் தெரிவித்துள்ளார்

கோலாலம்பூரில் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மகாநாட்டில் அவர் கலந்து கொண்டார். அங்கு உரை நிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. ஷுல்ஸ் மேலும் தெரிவித்ததாவது: "போதைவஸ்துப் பாவனையைத் தடுக்கும் உலகம் தழுவிய நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி வாஷிங்டனுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய போதைவஸ்தினைத் தவருகப் பயன்படுத்துதல், கடத்தல், தயாரித்தல் ஆகியவற்றுக்கெதிராக அமெரிக்கா ஒத்துழைக்கும். அத்துடன் இவற்றுக்கெதிராக தகுந்த போராட்டமும் நடத்தப்படவேண்டும்" என்றார். (ி)

## இலங்கை மகாநாட்டில் இந்தியா பங்குபற்றாது!

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள இந்துமகாசமுத்திரம் குறித்த ஆலோசனை மகாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளமாட்டாது.

இம் மகாநாடு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை கொழும்பில் இடம்பெறும்.

இந்தியா இம் மகாநாட்டில் கலந்துகொள்ள மறுத்திருப்பதை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் திரு கே. என். டிக்ஸித், இலங்கை வெளிவிவகாரச் செயலாளர் திரு. ஐயசிங்கவிடம் நேற்றுத் தெரிவித்தார்.

இம் மகாநாட்டின் பிரதான கூட்டம் அடுத்தாண்டு ஜனவரியில் இடம்பெறவுள்ளது. (ி)

## இந்திய பிரதம நீதியரசர்

(புதுடில்லி)

இந்தியாவின் புதிய பிரதம நீதியரசராக நீதியரசர் திரு பி. என் பகவதி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியப் பிரதம நீதியரசர் திரு. சந்திரசூட் 7 ஆண்டுகால சேவையைத் தொடர்ந்து இளைப்பாறுவதையடுத்தே புதிய நீதியரசராக பகவதி நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதம நீதியரசர் பகவதி இந்திய ஜனதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து தமது பதவியை ஏற்றுக் கொண்டார். (ி)

## புதிய கல்வி வலயங்கள்

(பண்டத்தரிப்பு)

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைமுறைப் படுத்தப்படவிருக்கும் புதிய கல்வித் திட்டத்தின் பிரகாரம் வட்டுக்கோட்டை கல்வி வட்டாரம் நான்கு வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, சுழிபுரம், காரைநகர் ஆகிய நான்கு வலயங்களாக அடுத்தாண்டு தொடக்கம் இக்கல்வி வட்டாரம் இயங்கி வரும் என்று தெரிவிக்கப்பட்டுகிறது.

## ஆங்கிலக்கல்வியின் அவசியம் பற்றி கல்வி அதிகாரி

[யாழ்ப்பாணம்]

"ஆங்கிலம் உலகமொழி. அதன் அவசியம் இன்று எல்லோருக்கும் நன்கு விளங்குகின்றது. வெளிநாடு சென்றாலும், உள்நாட்டில் இருந்தாலும் ஆங்கிலக் கல்வி மிகமிக இன்றியமையாததாக இருக்கின்றது. ஆங்கிலக் கல்வியின் அடித்தளம் ஆங்கிலப் பாலர் பாடல்கள். சின்னஞ்சிறு குழந்தைகளின் வாயில் இலகுவாக இசையோடு ஊட்டக்கூடியவை பாலர் பாடல்கள். சிறுவயதில் ஆங்கிலப் பாடல்களை இசையோடு கற்பித்தால்தான் அவர்களுக்கு வயது வளரவளர ஆங்கிலத்தில் பற்று ஏற்படும். இதனை ஆரம்ப பிரிவில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்" இவ்வாறு வட்டாரக் கல்வி அதிகாரி [ஆங்கிலம்] திரு. ஆர். கே. குலசேகரம் கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையம் ஆரம்ப பிரிவு ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கில பாலர் பாடல் பயிற்சிக் கருத்தரங்கில் உரையாற்றும்போது கூறினர்.

மேற்படி கருத்தரங்கு அச்சுவேலி புனித திரேசா மகளிர் வித்தியாலயத்தில் கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையத் தலைவரும், கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரியுமாகிய திரு. ஆ. வ. தங்கராசா தலைமையில் நடைபெற்றது. ஆங்கில ஆசிரியர்கள் பங்குகொண்ட பயிற்சிக் கருத்தரங்கில் திரு ஆர் கே குலசேகரம். மேலும் பேசும்போது "யாழ். மாவட்டத்திலேயே இத்தகைய பயிற்சிக் கருத்தரங்கு இங்குதான் முதல்முதல் நடைபெறுகின்றது. கோப்பாய் கல்வி மூலவள நிலையத்தின் இந்த முயற்சி உண்மையிலே பாராட்டுக்குரியதாகும். இங்கு ஆங்கில ஆசிரியர்கள் பாலர்பாடல்களை இசையோடு சேர்ந்து பாடிப் பயிற்சி செய்வது ஒருமுன்மாதிரியான விடயம்" என்றும் கூறினர்.

தலைமையுரையாற்றிய திரு. ஆ. வ. தங்கராசா "பாடசாலைகளில் ஆங்கிலப் பாடத்தை விரும்பிக் கற்கும் மாணவர்களை உருவாக்க வேண்டும். அதற்கு ஆரம்பத்தில் இருந்தே அவர்கள் விரும்பக் கூடியவிதமாக கல்வி போதனைசெய்யப்படவேண்டும். இக்கருத்தரங்கு மூலம் ஆங்கில ஆசிரிகள் பெரிதும் பயன் பெறுவர்" எனக்கூறினர்.

இப் பயிற்சிக் கருத்தரங்கில் பியானே, எக்கோடியன், கிற்றார் ஆகிய இசைக் கருவிகளோடு ஆங்கில பாலர் பாடல்கள் பாடிப் பயிற்சி செய்யப்பட்டு, ஒலிப்பதிவும் செய்யப்பட்டது இப்பாடல்களும், வேறுபல ஆங்கில பாலர் பாடல்களும் கோப்பாய் வட்டாரத்திலுள்ள பாடசாலைகளின் ஆரம்ப பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள் கேட்டுப் பயிற்சி பெறுவதற்கு ஆவன செய்யப்படுமென கோப்பாய்வட்டாரக் கல்வி மூலவள நிலையப் பொறுப்பதிகாரி திரு எஸ் சி எஸ் சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.

## அழகியற் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவளநிலையம், ஆண்டு ஒன்று ஆண்டு நான்கில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், சங்கீத ஆசிரியர்களுக்குமான அழகியற் கருத்தரங்கை 15-ம் திகதி திங்கட்கிழமை புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் உள்ள கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலைய விரிவுரை மண்டபத்தில் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ஆ. வ. தங்கராசா தலைமையில் நடத்துகிறது.

இக் கருத்தரங்கில் பிரதம கல்வி அதிகாரி திரு. வெ சபாநாயகம், கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி, கல்வி அதிகாரி திரு. கு சோமசுந்தரம், யாழ்ப்பாண வட்டாரக் கல்வி அதிகாரி திரு இ சிவானந்தன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

பாலர் பாடல்களை சங்கீத வட்டாரக் கல்வி அதிகாரி திரு சு கணபதிப்பிள்ளை, திரு. திலகநாயகம்போல், திருமதி பிறேமா ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் பாடிப் பங்குகொள்ளும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கின்றனர் இப் பாலர் பாடசாலைகளுக்கான அபிநய அசைவுகளை நடன ஆலோசகர் திரு வேல் ஆனந்தன் விளக்குகின்றார்.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் பக்கவாத்தியங்களோடு பயிற்சியும், ஒலிப்பதிவும் இடம் பெறவுள்ளதாக இக் கருத்தரங்கிற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ள கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்

## இலங்கை கடற்படையால் சூடுபட்ட இராமேஸ்வரம் மீனவர்களுக்கு நிதியுதவி!

[சென்னை]

இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டு இறந்த இராமேஸ்வரம் மீனவர்களுக்கு நிவாரணம் அளிக்கும்வகையில் நிதியுதவித் திட்டமொன்றை தமிழகஅரசு ஆரம்பித்துள்ளது.

சுழல்நிதி அமைப்பு என்னும் பெயரில் இத்திட்டத்துக்கென ரூபா 50 ஆயிரத்தை தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்துடன் சூடுபட்டுக் காயமடைந்த இராமேஸ்வரம் மீனவர்களுக்கும் முதலமைச்சர் பொதுநிவாரண நிதியில் இருந்து நிதிஉதவி வழங்குவதற்குச் சிபாரிசுசெய்யப்பட்டுள்ளது.

தமிழக மீன்வளத்துறை அமைச்சர் திரு எம் ஆர் கோவிந்தன் இந்த நிதியுதவித் திட்டத்துக்கான கோரிக்கையை தமிழக அரசிடம் விடுத்திருந்தார். (ி)

## கைத்தொழில் பயிற்சித் திட்டத்தின்கீழ் 25 ஆயிரம் இளைஞர்களுக்கு விசேட தொழில் பயிற்சி

(கொழும்பு)

உலகவங்கியின் ஆதரவில் நிர்மாணத்துறை கைத்தொழில் பயிற்சித் திட்டத்தின் இரண்டாவது திட்டத்தின் கீழ் 25 ஆயிரம் இளைஞர்களுக்கு பல்வேறு தொழில் துறைகளில் பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது.

உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் கீழான பயிற்சித் திட்டத்தின் முதலாவது திட்டம் இவ்வாண்டுடன் முடிவடைகிறது. இதன் 2வது திட்டம் 1986ம் ஆண்டு முதல் 1990ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அமுல் செய்யப்பட இருக்கிறது

உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரும் பிரதமருமான திரு ஆர். பிரேமதாசா அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்த இப் பாரிய திட்டத்தை அமைச்சரவைஅங்கீகரித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் கலாநிதி அனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்தார்.

இத் திட்டத்தின் கீழ் பாரிய இயந்திர இயக்குநர்களாக 1200 பேரும் சிறிய வாகன இயக்குநர்களாக 500 பேரும் மின்னியலாளர்களாக 2500 பேரும் மேசன் வேலைக்கு 10,200 பேரும் பயிற்சி அளிக்கப்படுவர். அத்துடன் 8200 பேருக்கு தச்சுவேலையும் 1000 பேருக்கு 'பிளம்பர்' வேலையும் 1,500 பேருக்கு பூச்சு வேலையும் பயிற்றுவிக்கப்பட இருக்கிறது

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று சான்றிதழ்களைப் பெற்றவர்கள் வெளிநாடுகளில் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபா வரை ஊதியம்பெற முடியும் என்றும் கலாநிதி அல்விஸ் தெரிவித்தார்.

## வருடாந்த கூட்டம் இன்று

[யாழ்ப்பாணம்]

யாழ் மத்தியகல்லூரி அபிவிருத்திச் சங்க வருடாந்தக் கூட்டம் இன்று கல்லூரி அதிபர் திரு. வி. பாலசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. [மா]

### மணிவாக்கு

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும். — பாரதியார்.

## நமது நோக்கு

### யாழ். நீர்வளம்

யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி பற்றி பல பழைய, புதிய தகவல்கள் பத்திரிகையில் மலிவது இன்று சகஜம்.

நாம் எதிர்பார்த்தது போல் மலிந்த பொருள்கள் சந்தைக்கு வரும் பாங்கில் இவை அமைந்துவிடலாகா தென்பதே எமது எச்சரிக்கை.

ஒரு நாடு செழிப்புற்றோங்குவதற்கு நீர்வளமும் நிலவளமும் இன்றியமையாதன நீர்வளம் மிகுந்த நாடுகள் நிலவளமும் உடையனவாயிருத்தல் இயற்கை,

நீர்வளம் என்று சிறப்பித்துக் கூறுவது மழையையே யாம். மழைவளத்தைத் திருவள்ளுவர்-வானமிழ்தம் என்பர். மழையின்றி வாழ்க்கை நடைபெருது. உயிர் வாழ்க்கையே இடையூறுபடுவதால், உயிரின் இலட்சிய வாழ்க்கையாகிய தவமும் நடைபெருதென்கிருர் முனிவர்.

எங்கள் நாடு தானமும் தவமுமுடைய நாடாக விளங்குவதற்கு இலங்கையின் நடுப்பாகத்தில் நிறைந்திருக்கும் மலைகள் இயற்கையின் நியதி எலலாம். இலங்கை ஒரு நாடு என்பதற்கு இது ஒரு சாதாரண ஆதாரம்.

இலங்கையின் தமிழ்ப் பெரும் புலவர் நவாலியூர் சோமசுந்தரனூர் இந்த மலைகளிலிருந்து சுரக்கும் மழைக்கு அளிக்கும் புலமை இன்று மனிதனிலே காணும் புன்மைக்கு ஒரு அருமருந்தாகும்.

வானத்தில் காணப்படும் வெண்முகிற் கூட்டங்களை புலவர் எல்லாள மன்னனின் இருதயத்துக்கு ஒப்பிடுகிருர்.

புரட்சிக்கவிஞர் பழமையைப் பாராட்டுதலிற் பயனில்லை என்றபோதும், இன்று தமிழ் மக்களுக்கு உவகை உண்டாக்கவல்ல இந்த உவமைக்கு உரித்துக் கொண்டாடுவது தவிர்க்க முடியாதநிலை. எல்லாளன் சோழ பரம்பரையைச் சார்ந்த தமிழ் மன்னன். துட்டகைமுனு என்னும் சிங்கள அரசன் காலத்தில் இலங்கையை அரசு செய்தவன். மக்களுக்கு மட்டுமன்றி மன்னுயிர்க்கெல்லாம் அறமும் அருளும் காட்டிவந்தவன். சிங்கள அரசனின் பெருமதிப்புப்பெற்றவன்.

இன்று துட்டகைமுனு பற்றி இலங்கை ஜனாதிபதி தொடக்கம் அமைச்சர்கள், சிங்கள அரசியல்வாதிகள் நினைவுகூர்ந்து சிங்களத் தேசியத்தை வலுப்படுத்துகின்றனர்

இலங்கையின் நீர் வளத்துக்கு மகாவலியையும் விக்டோரியா போன்ற நீர்த்தேக்கங்களையும் அந்த அரசனின் பெயரால், பெருமையால் விஞ்ஞான யுகத்திற்கு அழைத்துச் செல்கின்றனர்.

தேசியப் புலவர் நவாலியூர் சோமசுந்தரனுருக்கு இந்தப் பிரிவினை எண்ணம் என்றும் எட்ட வில்லை.

எல்லாளனை முகிலுள்ள காலம்வரைக்கும் நினைக்கச் செய்ததுபோல், இலங்கையின் மலைகள்மீது இம்மழை முகில்கள் தங்கிப் பெய்த மழைக்கு நான்கு உவமைகள் மிகப் பொருத்தமான வகையில் கூறப்படுகின்றன. குமணவள்ளலைப்போல் பருவமறிந்து. கைம்மாறு கருதாது. சாதி மத இன பேதமின்றி நீரை வாரி வழங்குகின்றது. "மடை திறந்திடுங் கொடைவிதங்கள்" என்கிருர் புலவர்.

இலங்கையிலுள்ள எல்லா மலைகளிலும் பெய்யும் பெருமழைச் செல்வம் கடலுக்குப் பலியாகாது நாட்டு மக்கள் அனைவருக்கும் பயன்படவேண்டுமென்றும், மகாவலி யாழ்ப்பாணத்துக்குப் புறம்பானதல்லவென்றும் இடித்துரைத்தவர்; எங்கள் காலத்தில் வாழ்ந்த, பிரிட்டிஷ் ஆட்சியில் இலங்கை நிர்வாக சபையின் முதற் தமிழன், கௌரவ கே. பாலசிங்கம் அவர்கள். தமிழ் மக்களின் பொருளாதார சுபீட்சத்தை இலங்கைத் தேசிய நோக்கில் கணித்த முன்னோடி அவர்.

அது நிற்க, புலவர் குறிப்பிடும் மற்றைய மூன்று உவமைகள் எவை? வெவ்வேறு மலைகளுக்கு புத்தபிரான். ஏசுநாதர், ஆறுமுக நாவலர் எனபோரை சிறப்பு வகையில் ஒப்பிடுகின்றுர் புலவர்.

பாதபங்கயமலையிலே பொழிந்தமழை புத்தமுனிவரின் போதனைக்கும், பேதுருமலையை யேசுநாதரின் மலைப் பிரசங்கத்துக்கும்,ஆறுமுகநாவலரின் கண்டனப் பிரசங்கத்தைக் கதிரமலைக்கும் ஒப்பிட்ட புலவர்; இலங்கையின் தங்கத் தாத்தா. எவ்வாறுபாரதத்தின் வங்கத்தாத்தா தாகூர் இந்திய தேசியத்துக்கு கவிமழை பொழிந்தாரோ அவ்வாறு இலங்கையின் தங்கத் தாத்தா இந்நாட்டின் தேசியத்துக்கு தமிழ் மழை பொழிந்தார்.

ஆனல் தமிழ்மழை இன்னும் யாழ்ப்பாணத்துக்கும், வறண்டபகுதிக்கும் நீர் வளமாக மாறமுடியவில்லை. வகுப்புவாதம் இதனைத் தடுக்கிறது.

மகாவலிக்கும்யாழ் குடாவின் வாவித்திட்டத்துக்கும் எவ்வித தொடர்பில்லாத வகையில் சுதந்திர ஆட்சி நடந்துகொள்வதால், எமக்கென ஒரு தனிப்பட்ட நன்னீர்த்திட்டம் உருவாக்க வேண்டியதுர்ப்பாக்கிய நிலை நீடிக்கிறது. மனிதனின் கயமை மாற்றமடையாதா?

மலையிலும், ஆற்றிலும். அதன் நீரிலும் ஒருமைப்பாட்டை வளர்க்கத்தவறிய சுதந்திர இலங்கைஆட்சிக்கு இன்னெரு மாபெரும் சோதனை.

இதில் தவறக்கூடாதென்பது இந்தியா போன்ற அண்டைநாடுகள் மட்டுமல்லஅனைத்துலகும் விரும்புகிறது.

தெய்வம் விரும்புவதும் இதுவே!

நாளை ராஜகோபுர மகா கும்பாபிஷேகமும்

# அந்நியர் கைபடாத வண்ணை பெருமாள்கோயில்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் கோயில் சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 14ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை சிறப்பாக நடைபெறுகிறது.

இந்து ஆலயங்களை இடித்தும் மற்றும் இந்து சமய வழக்கங்களை அறவே ஒழிக்கவேண்டும் என்றும் முனைந்து நின்ற ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் சிறிய கோயிலாக வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் இருந்திருக்கிற தென்பதற்கும், இந்தக் கோயில் ஒல்லாந்தரால் சேதப்படுத்தப்படாதது மட்டுமல்ல இக்கோயிலைச் சார்ந்து வாழ்ந்தவர்கள் தமது சமயக் கொள்கைகளை அவர்கள் இஷ்டப்படி பின்பற்றுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தனதென்பதற்கும் ஆதாரம் உண்டு.

"இக்கோயிலின் சரித்திரமும் அதனைக் கட்டுவித்துப் பராமரித்துவரும் பண்டாரவாளச் செட்டிப்பிள்ளைகளாகிய பத்மசாலிகளின் சரித்திரமும் ஒன்றேடொன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன. கி.பி. 1347ல் செகராசசேகரன் என்னும் பட்டத்துடன் முடிசூட்டப்பட்ட குணபூஷண இலங்கையாரியன் தன் காலத்தில் ஆந்திர நாட்டினின்றும் இவர்களை அழைப்பித்து வண்ணைப்பண்ணையிற் குடியேற்றுவித்தானென ஒரு ஐதீகமுண்டு,

"ஒல்லாந்தர் நெசவுத் தொழிலை விருத்திசெய்வதன் பொருட்டுத் தென்னிந்தியாவிலிருந்து நெசவுத் தொழிலாளரையும் சாய வேலை செய்வோரையும் கி பி 1665ல் கொண்டு வந்து குடியேற்றினுர்கள்......

### "கோபால்"

"குணபூஷண சிங்கையாரியன் காலத்தில் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டுக் குடியேற்றப்பட்ட நெசவாளர்கள் தமது தொழிலைக் குன்றவிட்டதனுற்போலும் ஒல்லாந்தர் தமது ஆட்சிக்கால முற்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து நெசவாளர்களையும் சாயத் தொழிலாளர்களையும் அதிக பணம் கொடுத்துக் கொண்டுவந்தனர். இவர்கள் மாத்திரமே தங்கள் இஷ்டப்படி தமது சமயக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கவும் இஷ்டப்படி வணங்கவும் விடப்பட்டனர்".

இவ்வாறு இவ்வாலயத்தின் தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு. து. சீனிவாசகம் ஆதாரங்களுடன் எழுதிய ஒரு கட்டுரையில் குறிபபிட்டுள்ளார்.

இச்சாகியத்தைச் சேர்ந்த ஒரு பெரியவர் ஒரு பலாமரத்தின் கீழ் ஸ்ரீவேங்கடேசப்பெருமாளின் சிறிய விக்கிரகம் ஒன்றை வைத்து வணங்கினுரென்றும், அதனிலிருந்தே இக்கோயில் உருவாகியிருக்க வேண்டுமென்றும் நம்பப்படுகின்றது.

இன்று இவ்வாலயத்தின் தலவிருட்சமாக விளங்கும் பலாமரம் நடுவே கோறையாகியுள்ளபோதிலும் அடிமரத்திலிருந்து கிளைகள் வளர்ந்து நிற்கின்றன. ஆலயத்தின் உள்ளே மேற்குப் பிரகாரத்தில் ஸ்ரீமகாலட்சுமி சந்நிதியின் பக்கத்தில் இத்தல விருட்சம் நிற்கின்றது. ஆதியில் இங்குவைத்து அப்பெரியார் வணங்கிய ஸ்ரீவேங்கடேச விக்கிரகம் ஆதிநாராயணர் என்றும் வழங்கப்பெறுகிறார்-தெற்கு வாசலில்-

குணதிசை முடியை
வைத்து
குடதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டி
தென்திசை இலங்கை
நோக்கி

அரவணையில் துயிலும் கடல் நிறக் கடவுள் அரங்கநாதன் சந்நிதியில் இந்த ஆதிநாராயணரும் எழுந்தருளி மூர்த்தியுடன் காட்சியளித்துக் கொண்டிருக்கிறுர்.

அரங்கநாதரைப் பார்த்தபடி ஆழ்வார்கள் பன்னிருவரும்நிற்கின்றனர்.

கர்ப்பக்கிருக விமானத்தில் ஸ்ரீதேவி பூமிதேவி சமேத வேங்கடேஸ்வரப் பெருமாளையும் தென்புறத்தே மகாலட்சுமி திருக்கல்யாணக் காட்சியையும் வடபுறத்தே ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணக் காட்சியையும் காணலாம்.

மகாலட்சுமி சந்நிதான விமானத்திலும் ஸ்ரீ ஆண்டாள் சந்நிதான ஸ்ரீகிருஷ்ணர், ஸ்ரீமகாலட்சுமி, ஸ்ரீ ஆண்டாள் ஆகியோர் அற்புதமாகச் சிற்பியின் கைவண்ணத்தில் உருவாகி நிற்கின்றனர்.

ஆலயத்தினுள்ளேயே சுமார் நூறு சிற்பங்கள் உயிரோவியமாகப் பொருத்தமான இடங்களில் செதுக்கப்பட்டிருப்பது கண்ணன் கோயில் கலையழகுக்குப் பெயர்பெற்றது என்பதை நிரூபிப்பதாகவுள்ளது.

### நெடிதுயர்ந்த ராஜகோபுரம்

1975ம், 76ம் ஆண்டுகளில் ஆரம்பமான ராஜகோபுர வேலைகள் விரைவாக நடைபெற்று 1778ம் ஆண்டு சித்திரை மாதம் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது

இக்கோபுரத்தில் மொத்தம் இருநூற்றி நாற்பது சிற்பங்கள் வடிக்கப்பெற்றுவுள்ளன. கோபுரத்தின் தென்புறத்தே ஸ்ரீராமன் கூனிக்கு மண் உருண்டை எய்தது, விஸ்வாமித்திரருடன் யாகம் காக்கச் சென்றது மிதிலையில் "அண்ணலும் நோக்கினுன் அவளும் நோக்கினுள்" என்று கம்பர் வர்ணித்தபடி சீதாதேவியை ஸ்ரீராமன் கண்டதுமுதல் ராவண சம்காரம்வரை ராமாயணக் காட்சிகள் அற்புதமாக உருவாக்கப்பெற்றுள்ளன.

வடபுறத்தே கண்ணன் பார்த்தனுக்குச் சாரதியாக அமர்ந்து கீதோபதேசம் செய்யும் காட்சியும் மற்றும் பகவதக்

(5-ம் பக்கம் பார்க்க)

### ஆடி அமாவாசை விரதம் எந்நாளில்?

இந்துக்கள் தம் பிதிர் கடன்களைச் செய்வதற்குச் சித்திரா பூரணையையும், ஆடி அமாவாசையையும் பண்டைக்காலம் தொடக்கம் விரததினமாக அனுஷ்டித்து வருகின்றனர். கடந்த காலங்களில் எமது பஞ்சாங்கங்களின் வியாபார நோக்கங்களினுல் வருடப்பிறப்பை மாற்றுவது, சிவராத்திரியை மாற்றுவது திருவிழாக்கள் நடக்கும் காலத்தை மாற்றுவது எமக்குப் புதிதான விடயமல்ல

## மக்கள் கருத்து

சூரியனுக்கு ஏழில் சந்திரன் சித்திரை மாதத்தில் வரும்போது சித்திரைப் பூரணையை இந்துக்கள் கொண்டாடுகின்றனர், சூரியன் மேட ராசியில் இருப்பார். சூரியன், சிவன் சந்திரன் உமை இவர்களது அருள் நோக்கே சித்திரா பூரணையாகும்.

சூரியனும் சந்திரனும் அதாவது சிவனும், உமையும், கர்க்கடக இராசியில் ஒன்றுகச் சஞ்சரிக்கும் காலம் ஆடி அமாவாசையாகும் அதுவும் சூரியனும், சந்திரனும் ஒரே நட்சத்திரபாதத்தில் அர்த்தநாரிச்சுரராக இருக்கும் காலம் ஆடி மாதம் 32-ந் திகதி வெள்ளிக்கிழமையாகும். 16-8-1985 ஒரு மாதத்தில் இரு அமாவாசைகள், இரு பூரணைகள் வருவது மலமாதமாகும்.

ஆராய்வு சோதிட கிரகசிந்தாமணி-என்ற நூலில் 31-ம் பக்கம். அதன்பிரகாரம் இரண்டாவது தினமாக வருகின்ற அமாவாசையே விரததினமாகவும், திதியாகவும் கொள்ளப்படவேண்டுமென்பது சாத்திர சம்மதமாகும். ஆகவே இந்துக்கள் அனைவரும் தீர்க்கமாகச் சிந்தித்து விரத தினத்தை அனுட்டிப்பீர்களாக.

-ஐயாத்துரை சரவணபவன்
சோதிட ஆராய்வாளன்.

இன்று மாவிட்டபுரம் கார்த்திகைத் திருவிழா

### மாவைவாழ் கந்தா மன்பதையைக் காத்திடுவாய்

சஞ்சலங்கள் தீர்த்திடுவாய் கந்தா கந்தா
சாந்திதனை அளித்திடுவாய் கந்தா கந்தா
அஞ்சேலென் றருள்புரிவாய் கந்தா கந்தா
ஆறுதல்கள் அருளிடுவாய் கந்தா கந்தா
செஞ்சேவல் கொடியுடையாய் கந்தா கந்தா
சேமமெல்லாம் நல்கிடுவாய் கந்தா கந்தா
மஞ்சுதவாழ் மாவையில்வாழ் கந்தா கந்தா
மனக்கலக்கம் மாற்றிடுவாய் கந்தா கந்தா
கொஞ்சுமயில் வாகனனே கந்தா கந்தா
கொடுமைகளை நீக்கிடுவாய் கந்தா கந்தா
வஞ்சகரை வாட்டிடுவாய் கந்தா கந்தா
வாதனைகள் வீட்டிடுவாய் கந்தா கந்தா
நெஞ்சமதில் நிலைத்திடுவாய் கந்தா கந்தா
நீசர்குல மழித்தவனே கந்தா கந்தா
பஞ்சம்பசி ஒழித்திடுவாய் கந்தா கந்தா
பாவவினை அழித்திடுவாய் கந்தா கந்தா

-முருகவே. பரமநாதன்

# நான்காம்ஆண்டு நினைவு அஞ்சலி



ஸ்ரீதேவன் இரவீந்திரன்

தோற்றம்: 08-09-1962

மறைவு: 13-07 1981

சமர்ப்பணம்

அன்பால் பண்பால்
அறிவால் உளத்தில்
இன்பம் நிறைத்த எம்
எழிலார் ரவீந்திரா
துன்பப் பிரிவு நல்
ஆண்டை விழுங்கினும்
உன்பத மலர்க்கு எம்
நினைவுகள் சமர்ப்பணம்

அப்பா, அம்மா, தம்பி, உறவினர், நண்பர்கள்.

36/1, செட்டித்தெரு, நல்லூர். 4386

---

டபிளயு எஸ். செந்திலநாதன, மனுதாரின் சட்டத்தரணி

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

யாழ்ப்பாணம் பிறவுண் ரோட், 38, கார்த்திகேசு விஜயரத்தினம் சண்முகநாதன் என்பவரின் மரண சாதனச் சொத்துக்களின் விடயத்தில்.

சண்முகநாதன் லோகேஸ்வரன், 38, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

—மனுதார்.

வழ. இல: தத்துவம் /3792

மேற்குறித்த இலக்கங்கொண்ட தத்துவ வழக்கு மேற்குறித்த இறந்தவரின் மரணசாதனச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இந்நீதிமன்றிற் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்றுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரும் 1985ம் ஆண்டு ஆடி மாதம் 19ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றிற்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985ம் ஆண்டு வைகாசி மாதம் 10ந் திகதி:

நீதிமன்றக் கட்டளைப்படி.

கு. குலசிங்கம், பதிவாளர்

(4347)

---

# யாழ். வீதி திருத்த வேலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட யாழ் நிறைவேற்று பொறியியலாளர் பிரிவில் இவ்வருட இறுதிக்குள் திருத்தவேலைகள் பூர்த்தியாகவிருக்கும் வீதிகள் பற்றிய விபரங்களும், அவ்வீதிகளை பொறுப்பேற்றுள்ள டிப்போக்கள் மற்றும், திருத்தப்பகுதிகள், செய்துமுடிக்கவேண்டிய காலஎல்லைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| வீதியின் பெயர் | டிப்போ | ஒதுக்கப்பட்ட பணம் | வேலைகள் ஆரம்பம் | முடிவு |
|---|---|---|---|---|
| கண்டி. யாழ். வீதி | யாழ். நகர் | ரூ. 93,000 | 2-7-85 | 20-7-85 |
| ஆரியகுளம் சந்தி | ,, | ரூ. 78,000 | 2-7-85 | 20-7-85 |
| யாழ். பருத் வீதி | ,, | ரூ. 70,000 | 2-7-85 | 16-8-85 |
| ,, | உரும்பராய் | ரூ. 44,000 | 15-7-85 | 30-8 85 |
| ,, | புத்தூர் | ரூ. 115 000 | 5-7-85 | 30-8 85 |
| யாழ். பலாலி வீதி | யாழ் நகர் | ரூ. 76 500 | 2-7-85 | 31-7 85 |
| ,, | உரும்பராய் | ரூ. 75 000 | 2-7-85 | 31-7-85 |
| ,, | ஏழாலை | ரூ. 53 000 | 8-7-85 | 31-7-85 |
| | பலாலி | ரூ. 100 000 | 8-7-85 | 30 8-85 |
| யாழ். கே.கே எஸ். வீதி | ஓட்டுமடம் | ரூ. 60 000 | 2-7-85 | 16-8-85 |
| ,, | மானிப்பாய் | ரூ. 60 000 | 2-7-85 | 16-8-85 |
| ,, | ஏழாலை | ரூ. 102,000 | 2-7-85 | 16-8-85 |
| ,, | பலாலி | ரூ. 85,000 | 15-7-85 | 31-7-85 |
| யாழ். மானிப்பாய் காரைநகர் வீதி | ஓட்டுமடம் | ரூ. 110,000 | 24-6-85 | 31-7-85 |
| ,, | மானிப்பாய் | ரூ 90,000 | 8-7-85 | 30-8-85 |
| யாழ். பொன்னாலை பருத்தித்துறை வீதி | ஓட்டுமடம் | ரூ. 90,000 | 22-7-85 | 30-8-85 |
| ,, | காங்கேசன்துறை | ரூ. 115 000 | 2-7-85 | 31-7-85 |
| ,, | பலாலி | ரூ. 125 00) | 2-7-85 | 30-8-85 |
| ,, | புத்தூர் | ரூ. 54 000 | 2-7-85 | 31-7-85 |
| புத்தூர் மீசாலை வீதி | புத்தூர் | ரூ. 115 000 | — | — |
| மானிப்பாய் கைதடி வீதி | மானிப்பாய் | ரூ 30,000 | 21-7-85 | 30-8-85 |
| ,, | உரும்பராய் | ரூ 120 000 | 24-7-85 | 30 8 85 |
| மாவிட்டபுரம்-கீரிமலை | காங்கேசன்துறை | ரூ. 34,000 | 2-7-85 | 13-7-85 |
| சண்டிலிப்பாய் சேந்தாங்குளம் வீதி | மானிப்பாய் | ரூ. 20,000 | 1-8-85 | 30-8 85 |
| ,, | காங்கேசன்துறை | ரூ. 79,000 | 15-7-85 | 30-8-85 |
| ஆவரங்கால்-தொண்டமனாறு வீதி | புத்தூர் | ரூ. 45,000 | 8-7-85 | 31-7-85 |
| வல்லை தெல்லிப்பளை அராலி வீதி | புத்தூர் | ரூ. 50,000 | 22-7-85 | 16-8-85 |
| ,, | பலாலி | ரூ 107,000 | — | — |
| ,, | காங்கேசன்துறை | ரூ 100,000 | 13-7-85 | 30-8-85 |
| தாவடி சுதுமலை வீதி | மானிப்பாய் | ரூ. 34 000 | 1-8-85 | 30-8-85 |
| கச்சேரி கடற்கரை வீதி | யாழ் நகர் | ரூ. 82 000 | 16-7-85 | 30-8-85 |
| நல்லூர் ஓட்டுமடம் வீதி | ,, | ரூ. 16,000 | 16-7-85 | 31-7-85 |
| ,, | ஓட்டுமடம் | ரூ. 11,000 | 16-7-85 | 16-8-85 |
| அம்பனை மாவிட்டபுரம் வீதி | காங்கேசன்துறை | ரூ. 30,000 | 16-7-85 | 16-8-85 |
| கட்டுவன்-மல்லாகம் சங்கானை வீதி | ஏழாலை | ரூ. 31,500 | 1-8-85 | 16-8-85 |

---

என் மதிப்புக்குரிய அன்பர்களுக்கோர்

# பணிவான வேண்டுகோள்

17-06-85 அன்று புதூர் நாகதம்பிரான் கோவிலடியில் வைத்து எனக்குச் சொந்தமான ELF லொறியை (மொடல்-150-இல 28 ஸ்ரீ 9004) தாங்கள் ஓர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இரண்டு மணித்தியாலத்தில் திருப்பி ஒப்படைப்பதாகவும் தெரிவித்துவிட்டு எடுத்துச்சென்ற மதிப்புக்குரிய அன்பர்கள் இதுவரை எனதுவாகனத்தைதி ப்பி ஒப்படைக்கவில்லை வாகனம் இல்லாதிருப்பதால் இன்று எனது அன்றாட தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே தயதுசெய்து தாங்கள் கூறியபடி எனது வாகனத்தை திரும்ப ஒப்படைக்கும்படி பணிவாக வேண்டுகிறேன்.

எம். எஸ் ஜமால்தீன், முஸ்லீம் வட்டாரம், யாழ்ப்பாணம்.

4401

---

# முதலாண்டு நினைவஞ்சலி

## திருமதி விசுவலிங்கம் அன்னபூரணி



அன்னையின் மடியில்: 3-7-1914

ஆண்டவன் அடியில்: 25-6-1984

திதி: 13-7-1985

எங்கள் குடும்ப விளக்காய் ஒளிவீசி நின்று எம்மைக் காலமெல்லாம் கண்ணின் இமைபோல் காத்து வந்த எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் மறைந்து ஒரு வருடமாகினாலும் உங்கள் அன்பும், பண்பும், பாசமும், உருவமும் எங்கள் கண்முன்னே நிழலாடுகின்றன. அல்லும், பகலும் பாடுபட்டு எமமைக் காத்தீர்களே! உங்கள் பிரிவு எங்கள் குடும்பத்தை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டது. உங்கள் ஆன்மா இறைவனடியில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயறும்:
அன்புக்கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"அன்னகிரி"
அளவெட்டி தெற்கு.
அளவெட்டி.

4395

---

# இன்றைய பலன்

மாதம்—ஆனி
திகதி—29 (1985-07-13)
சனி
திதி—ஏகாதசி பின் இரவு வரை
நக்ஷத்திரம்—கார்த்திகை பி. இ. வரை

மேடம்:- கடன் தொல்லைகள் கவலையைத்தரும். இனத்தவர்களுடன் பகை தோன்றக்கூடும் புதிய முதலீடுகளை இன்று தவிர்க்கவும்.

இடபம்;- இளத்தவர் ஒருவரின் மீது ஆத்திரம் பிறக்கலாம் உடல் நலனும் பாதிக்கப்படலாம் எதற்கும் ஆத்திரப்படாது பொறுமையுடன் இருக்கவும்,

மிதுனம்:- மேலதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதற்கு இன்று நல்ல நாள் குடும்பத்திலும் மகிழ்ச்சி தென்படும் சிநேகிதவழியாலும் நன்மையுண்டு,

கடகம்;- நினைத்த காரியத்தில் தடைகள் ஏற்படும் சிலரின் கண்டனங்களுக்கு இலக்காக நேரிடலாம். மனத்திடம் வேண்டும்.

சிங்கம்:- வசதிகள் பெருகும் வரவிலும் திருப்தியுண்டு செல்வாக்குப்படைத்தவர்களின் உதவியும் கிடைக்கும்.

கன்னி:- இதயத்தில் மகிழ்ச்சி தோன்றும். உறவு முறைகளில் இறுக்கமேற்படும் புதிய பாதை தென்படும்,

துலாம்:-எதிர்பாராத விபத்துக்கள் நேரிடலாம். ஆயுதங்களுடன் பழகுபவர் இன்று அவதானமாக இருக்கவும்.

விருச்சிகம்:-குடும்பம் இன்று கலைக்கோவிலாக மாறும் இசைத்துறையில் அதிக ஆர்வம் பிறக்கும் பிள்ளைகளினால் பெருமைக்கும் இடமுண்டு

தனுசு:- வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றும் கடன் தொல்லைகள் அதிகரிக்கும் மனத்தை ஒருவழிப்படுத்திச் செயலாற்றவும்.

மகரம்:- உள்ளப்படுதாவில் உவகை கூத்தாடும். இனத்தவர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள் பத்திரிகைத் துறையில் தொழில்புரிவோர்பாராட்டுதலைப் பெறுவர்.

கும்பம்;- தொழில் சிறப்புடன் விருந்தினர் வருகையுமுண்டு இதயத்தில் இன்பத்தின் மின்னல் தோன்றும்

மீனம்:- வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கலாம். வணிகர்களாயின் அதிக ஆதாயத்தைப் பெறுவர் புதுமையான காரியங்களில் மனதைச் செலுத்துவீர்கள்.

திருமலை வே. ரவீந்திரன்

---

# அந்நியர் கைபடாத...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கதையிலுள்ள சில காட்சிகளும், கிருஷ்ணலீலைகள் காட்சிகளும் அழகாகக் காட்சியளிக்கின்றன.

ஆலிலையில் துயிலும் பாலகிருஷ்ணன், வெண்ணெய் திருடும் கண்ணன், பூதகியிடம் பாலருந்தி உயிரெடுக்கும் மாயன் இப்படிப் பல்வேறு தோற்றங்களையும், தசாவதாரக் காட்சிகளையும் சிற்பி உயிரோவியங்களாக உருவாக்கியிருக்கிறார்.

தமிழ்நாடு திருப்புலானி ஊரைச் சேர்ந்த வி. நாகலிங்க ஸ்தபதியாரின் கைவண்ணத்தைப் பெருமாள் கோயில் முன் மண்டப முகப்பிலிருந்து ஆலயத்தின் ஒவ்வொருபகுதியிலும் கண்டு மகிழலாம்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரதராசப்பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதுடன் ராஜ கோபுரத்திற்கும் கும்பாபிஷேகம் நடைபெறுவது இரட்டிப்புச் சிறப்பு நிகழ்ச்சிகளாகும். இக்கும்பாபிஷேகக் கிரியைகளைப் பல்வேறு வேதியர்களின் உதவியுடன் இவ்வாலயத்தின் பிரதம குரு பிரதிஷ்ட சிரோன்மணி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் நிறைவேற்றி வைப்பது மற்றொரு சிறப்பம்சம்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பதும் கும்பாபிஷேகம் தரிசனத்துக்கு அருமையுடையதானதாலும் இப்பெருவிழாவில் கலந்து கொண்டு தரிசனம் பெறுபவர்கள் பாக்கியசாலிகளே!

## பண்டிதமணி கூறும் விளக்கம்

பண்டிதமணி கும்பாபிஷேகம்பற்றிக் கூறும் சுருக்க விளக்கம்:-

"'இறைவன் உயிர்க்குயிர், 'அவனன்றி ஓரணுவும் அசையாது' அவனே நம்மை நடத்துபவன்; அவன் கர்த்திற்குச் செய்யும் அபிஷேகமே உண்மை அபிஷேகம்; அஃது இருதயமாகிய கும்பத்தில் அன்பு என்கின்ற நீரைப் பூரித்துச் செய்வது; 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குவது'.

இது சித்தித்தற் பொருட்டே கோயிலிற் கும்பாபிஷேகம் நடத்துகின்றோம்.

மகாவிஷ்ணு காவற் கடவுள் விஷ்ணுவாய் அருள்பவரும் அந்த இறைவனே.

## சென் பற்றிக்ஸ் கல்லூரி
# விளையாட்டுப் போட்டியில் இரண்டு புதிய சாதனைகள்

(யாழ்ப்பாணம்)
மாணவர்கள் தமது வாழ்க்கைக்கு சிறந்த அத்திபாரம் இடுவதற்கு விளையாட்டுப் போட்டிகள் மிக மிக அத்தியாவசியமாகும். விளையாட்டுப் போட்டிகளில் தான் அடையும் வெற்றியையும் தோல்வியையும் சரிசமனாக நினைக்கும் ஒருமாணவன் தன் பிற்கால சிறந்த வாழ்க்கைக்கு திடமான ஒரு அணைக்கட்டை ஏற்படுத்துவான் என பிறர் அவனைக் கணிக்கக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட வண.பிதா லூயிஸ் பொன்னையா கூறினர்.

கடந்த வாரம் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் இரண்டுபுதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. 100 மீட்டர் ஓட்டப்போட்டியில் 13 வயது மாணவன் ஏ ஜி ராஜ்சங்கரும் 15 வயது மாணவன் ஜே.ஆர். பிருங்லினும் புதியசாதனைகளை நிலைநாட்டியுள்ளனர்.

மேற்படி விளையாட்டுப் போட்டியில் சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப் பட்டவர்கள் விபரம்வருமாறு 13 வயது- ஏ. ஜி ராஜ்சங்கர், 14 வயது- ஏ'பி சி. வின்டன். 15 வயது- ஏ.எம். நிமல்ராஜ் 16 வயது- வை. ரகுவன், 17 வயது- ஏ. கிருஷ்ஞகரன், 19 வயது-எம். அரியராஜ் இப்போட்டியில் ''போஞ்சின்'' இல்லம் 137 புள்ளிகளையும், ''லோங்'' இல்லம் 134 புள்ளிகளையும், 'மத்தியூஸ்'' இல்லம் 128 புள்ளிகளையும், ''டாண்'' இல்லம் 123 புள்ளிகளையும் பெற்றது இவ்விளையாட்டுப் போட்டிக்கு சென். பற்றிக்கல்லூரி அதிபர் வண. பிதா,பிரான்ஸிஸ் ஜோசப் தலைமைவகித்தார்.

(வி)

## யாழ். செயலக நிர்வாக உத்தியோகத்தர்

[சுண்டுக்குளி]
யாழ். செயலக நிர்வாக உத்தியோகத்தராகவும், காரியாலய உதவியாளராகவும் திரு. து. இ. இரத்தினவேல் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் முன்பு குருநாகல், அனுராதபுரம் ஆகிய இடங்களிலுள்ள சுகாதார அத்தியட்சகர் பணிமனையில் நிர்வாக உத்தியோகத்தராக பணியாற்றியுள்ளார். 1983-ம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து யாழ் செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றஇவர் நிர்வாக உததியோகத்தர் தரம் 2-இல் கடமையாற்றி வந்துள்ளார்.

## கல்வி, விளையாட்டுத் துறைகளில் வளர்ச்சி குன்றியுள்ளது

(மாவிட்டபுரம்)
''மாணவர்கள் மத்தியில் விளையாட்டுத்துறையில் உள்ள ஆர்வம் குன்றுமல்இருக்க நாம் ஆவன செய்ய வேண்டும். பாடசாலைகளில் உள்ளக விளையாட்டுப் போட்டிகளை நடத்தி விளையாட்டுத்துறையில் மாணவர்களுக்கு உள்ளதகைமையை வளர்க்கவேண்டும். கல்வியில் மட்டுமல்ல விளையாட்டுத் துறையிலும் இன்று வளர்ச்சி தடைப்பட்டுள்ளது ஆனலும் நாம் இவற்றில் அதிக கவனம் கொள்ளவேண்டும்''.

இவ்வாறு தெல்லிப்பளை யூனியன் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டிக்கு தலைமை தாங்கி பேசிய கல்லூரி அதிபர் திரு. க.பாலசுந்தரம் கூறினர்.

கல்லூரி மைதானத்தில் நடந்த இப்போட்டியில் வோட் இல்லம் முதலிடத்தையும், சிமித் இல்லம் இரண்டாமிடத்தையும், துரைரத்தினம் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன.

## நிலாவெளி அகதி முகாமில்
# ஒருவர் கொலை

(திருகோணமலை)
நிலாவெளி அகதிமுகாமில் தங்கி இருந்த 34 வயதான மூர்த்தி என்று அழைக்கப்படும் செல்லையா முத்துசாமி என்றநபர், இனந்தெரியாத சிலரால் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார். இவ் விபரம் அவரது மரணவிசாரணையில் வெளியானது:

திருகோணமலை பதில் நீதவான் எம் கே. செல்வராசா மரணவிசாரணையை நடத்தினர். இறந்தவரின் மனைவியான கதரீன் சாட்சியமளிக்கையில்: சம்பவதினமிரவு 9 மணியளவில் அகதிமுகாமுக்கு வந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் இறந்தவரை அழைத்துச் சென்றதாகவும், சிறிது தூரத்தில் இறந்தவர் அம்மா அம்மா என்று கதறியதாகவும் தான் அருகே போகவில்லையென்றும், திரும்பி சிறிது நேரத்தில் இறந்தவர் வந்து சேர்ந்ததாகவும் நித்திரைக்குப் போகிறேன் என்றுகூறி நிலத்தில் சரிந்தவர் சிறிது நேரத்தில் இறந்துவிட்டதாகவும் சொன்னர் இறந்தவரின் மாமனரான வர்ணகுலசூரியா அன்ரனி பெர்னண்டோவும் சாட்சியமளித்தனர்.

கொலை எனத் தீர்ப்பளித்த பதில் நீதவான் சந்தேகநபர்களைக் கைதுசெய்யும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

## அப்பர் இல்லம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)
நாவற்குழிமகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலைஅதிபர்திரு. என் ஏ நாகராசா தலைமையில் நடைபெற்றது.

இவ்விளையாட்டுப் போட்டியில் 290 புள்ளிகளை பெற்ற அப்பர்இல்லம் முதலாம் இடத்தையும் 262 புள்ளிகளை பெற்ற சுந்தரர் இல்லம் இரண்டாம் இடத்தையும் 239 புள்ளிகளைப பெற்று சம்பந்தர் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றுக் கொண்டன.


உங்கள் மூலதனத்திற்கு கொடுக்கப்படும்
**வட்டி விகிதங்கள்**

மூன்று மாதம் 18% தொடக்கம் 20% வரை
ஆறு மாதம் 21% தொடக்கம் 23% வரை
ஒரு வருடம் 22% தொடக்கம் 25% வரை
உங்கள் காணியை இலகுவாக வாங்கவும் விற்கவும் எங்களை நாடுங்கள்

விபரங்களுக்கு:-
Jaffna Property Trades Ltd.
3, நவீனசந்தை [மேல் மாடி], யாழ்ப்பாணம்.
போன்: 23698.



**Commerce Centre,**
திருநெல்வேலி - ஆடியபாதம் வீதி.
(அம்மன் கோவில் முன்பாக)

**A/L 86, 87**
**புதிய கலை வர்த்தக வகுப்புகள்**

பொருளியல் — M. சின்னத்தம்பி
கணக்கியல் — S வன்னியசிங்கம்
வர்த்தகம் — D ஜெயராம்
அளவையியல் — S S மனேகரன்
இந்து நாகரிகம் — அருள்நங்கை
தமிழ் — பாலா

ஆரம்பம் 13-07-85 மாலை 3-00 மணி
குறிப்பு: பாதுகாப்பான இடம், குறிப்பிட்டளவு மாணவர்களே அனுமதிக்கப்படுவர். 4365




## நினைவில் நீங்காதவர்

அன்பும் பண்பும் நிறைந்தவர், மனவுறுதியும் இரக்க சிந்தையும், சேவை மனப்பான்மையும் இயல்பாய் அமையப் பெற்றவர் அமரர் ச, பா. யோசேப்பு மாதகல் வாழ் மக்கள் மனதில் என்றும் நிலைத்துநிற்கின்றார்.

மாதகல் வழ் மக்கள் அன்னரின் தன்னலமற்ற சேவையைப் பெற்றுப் பயனடைந்தார்கள் கூட்டுறவுத்துறையில் இவர் பெரும்பங்கு கொண்டவர் கூட்டுறவு ஊழியர்தொழிற்சங்கத்தின் பண்டத்தரிப்புக் கிளையின் தலைவராயும், மாதகல் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைத்தலைவராயும் பணியாற்றிய இவர் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் சென். தோமஸ் சனசமூக நிலையம் முதலியவற்றிலும் தலைமைப்பதவிகளை வகித்தார் கிராமசபை, இணக்க சபை இவற்றின் உறுப்பினராய் இன்னும் பலப்பல பதவிகள் வகித்து மாதகல்வாழ்மக்களின் மேம்பாட்டிற்காக அன்னர் ஆற்றிய சேவைகள் அளப்பரியன.

மாதகலில் வாழ் பல்வேறு சமூகங்களுக்குமிடையிலுள்ள தப்பவிப்பிராயங்களை நீக்கி யாவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு சமாதானமாகவும், நேச மனப்பான்குடனும் வாழ்வதற்கு ஒரு பாலமாகத் இவர் திகழ்ந்தார். அன்னர் சமூகசேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையிலேயே திடீரெனமறைந்தார் அன்னரைமாதகல்வாழ்மக்கள் என்றும்மறவார்

— ஆ லூயிஸ்

## சுகாதாரநிலையம் திறப்புவிழா

(பண்டத்தரிப்பு)
இளவாலை ஆரம்ப சுகாதார அபிவிருத்திச் சங்கத்தினல் இப்பகுதி பொதுமக்கள் நலன் கருதிஆரம்பித்துள்ள சுகாதார நிலையத்தின் திறப்பு விழா எதிர்வரும் 15-ம் திகதி திங்கட்கிழமையன்று நடைபெறவுள்ளது.


# வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, கனடா, செல்வதற்கான
சகல ஒழுங்குகளும்,
பிரான்ஸ்,இத்தாலிசெல்வதற்கானசிறந்தவசதிகளும்,
குறைந்த செலவில் காலதாமதமின்றி
செய்து கொடுக்கப்படும்.
வெள்ளி, சனி, ஞாயிறு வரை

வ நல்லையா,
அளவெட்டி வடக்கு - அளவெட்டி.
[3913]



**மில்க்வைற் பாவனையாளர்களுக்கு**
# விசேஷ அறிவித்தல்!

16-7-85 செவ்வாய்க்கிழமை மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தேர்த்திருவிழாவின்போது கிழக்குக் கோபுர வாசலில் அமைந்திருக்கும் மில்க்வைற் விளம்பரக் காட்சிச் சாலையில் எமது தயாரிப்புக்களை ரூபா இருபது (20/-) வாங்கும் அன்பர்களுக்கு ஒரு ''கந்தரனுபூதி'' புத்தகம் வீட்டுத் தோட்டத்திற்குரிய கீரைவிதையும், பொன்மொழிகளும் அடங்கிய பொலித்தீன் பை இனமாக வழங்கப்படும்.

மில்க்வைற் மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்பவர்கள் மேலுறைகளைக்கொடுத்து பெறுமதிவாய்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

வணக்கம்

அதிபர்
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.



# புத்தம் புதிய
**HONDA C-90**
முந்தியவிலை 17, 500/-

இப்பொழுது
மலிவு விலையில்
**15, 750/-**

மேலும் விபரங்களுக்கு:-
**CANTABIA LTD.**
21, MAIN STREET, JAFFNA.
T' PHONE: 24201.



**'ஈழநாடு' சிறு விளம்பர சேவை**

இப்புதிய விளம்பர சேவை, சிறுவிளம்பரதாரர்களை ஊக்குவிப்பதற்கும், உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் தமது பொருட்களை மாதத்தில் பத்து தடவைகளுக்கு மேல் குறைந்த கட்டணத்துடன் விளம்பரம் செய்ய உதவியாக இருக்கும்.

இவ்விளம்பரங்கள் 1 கலம் × 10 செ. மீ. அளவுடையவை இவற்றுக்கான கட்டணங்கள் ரூபா 100/- ஆகும்.

இச்சேவைக்காக வாரத்தில் இருதடவை இரண்டு பக்கங்கள் ஒதுக்கப்பட்டு அன்றைய தினங்களில் ''ஈழநாடு'' அதிக பங்கங்களில் வெளிவரும்.

சகல விளம்பரங்களையும் எமது முகவர்களுடன் தொடர்புகொண்டோ அல்லது காரியாலய நேரங்களிலோ ஒப்படைக்கலாம் விளம்பரங்கள், உற்பத்திப் பொருட்கள், வீடியோ வெளியீடுகள், விற்பனைப் பொருட்கள், டியூசன் சென்றர்கள், நூல் வெளியீடுகள் என்பன அடங்கும்.

'ஈழநாடு' சிறு விளம்பர சேவை
த. பெ. எண்: 49, யாழ்ப்பாணம்.
4373

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# கொழும்பு காலிவீதியில் பெண் பலாத்காரம்

(கொழும்பு)

காலிமுகத்திடல் வீதியில் வைத்து ஒருபெண் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் ஒரு இளம் ஜோடியினர் வந்த வாகனம் பழுதடைந்ததினுல் அவர்கள் காலி முகத்திடல் வீதிவழியாக நடந்து சென்று கொண்டிருந்தபோது அவ் வழியாக வந்த 6 பேர் அவர்களை வழி மறித்து இன்று ஜனுதிபதியை கொலை செய்ய முயற்சி செய்யப்பட்டுள்ளது அதனுல் உங்கள் மீது எங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று கூறி 5 பேர் அந்த வாலிபனை கூட்டிக் கொண்டு செல்ல ஒருவன் அந்த பெண்ணை இழுத்துக் கொண்டு சென்று கடலோரத்தில் வைத்து மானபங்கப்படுத்தினுராம். இச்சம்பவத்தை அறிந்து பொது மக்கள் அவர்களை துரத்திய போது இருவர் பிடிபட்டனர். நால்வர் தப்பிவிட்டனர் பிடிபட்டவரில் ஒருவர் அந்தப் பெண்ணை மானபங்கப்படுத்தியவராவார் தம்மை மானபங்கப் படுத்திய நபரை அந்தப் பெண் அடையாளம் காட்டிவிட்டார். இவர்கள் இப்போது பொலிஸ் பாதுகாப்பில் உள்ளனர்.

பெண்ணை மானபங்கப்படுத்தியவர் ஒரு இராணுவ வீரர் என்பது பின்னர் தெரியவந்துள்ளது.

## பனம்பொருள் கண்காட்சி இன்று

(மாவிட்டபுரம்)

சர்வதேச இளைஞர் ஆண்டினை முன்னிட்டு யாழ் வீமன்காமம் மகா வித்தியாலயமும் பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து நடாத்தும் பனம் பொருள் பொருட்காட்சி இன்றுமுதல் எதிர்வரும் செவ்வாய் கிழமை வரை மேற்படி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறுகிறது.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. க நடராஜா ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைக்கதெல்லிப்பழை ப நோ கூ ச. தலைவர் திரு சி சிவமகாராசா கண்காட்சியைத் திறந்துவைக்கிறுர்

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

கடன்தொல்லையால் அடிக்கடி தற்கொலை செய்யப் போகிறேன் என்று சொல்லிவந்த 5 பிள்ளைகளின் தந்தை நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

## விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டத்தரணி அமிர்தலிங்கம் இறந்துவிட்டார் என்று தீர்ப்பளிக்கக்கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனு இம்மாதம் 19-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இம்மனு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டுவருகிறது.

சட்டத்தரணி அமிர்தலிங்கம் இறந்துவிட்டார் எனத் தீர்ப்பளிக்கக்கோரி அவர் பாரியார் இம்மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இம்மாதம் 19-ம் திகதி இம்மனு தொடர்பான விசாரணை முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வண்ணூர்பண்ணை தென்கிழக்கு என்னும் இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தையா என்பவரின் மரண சாதனமில்லா மரணச் சொத்தினதும், உடமைப் பொருட்களினதும் விடயத்தில்

மரணமெய்தி வர்

வேலுப்பிள்ளை கந்தையா கைப்பெண் மனேன்மணி, இல: 100, மணிக்கூட்டுக் கோபுர வீதி, வண்ணூர் பண்ணை தென் கிழக்கு, யாழ்ப்பாணம்.

மனுதா .

வழ. இல: T/3811

எதிராக

1. கந்தையா சுந்தரராஜன், இல 100 மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம் தற்போது இங்கிலாந்து.
2. கந்தையா நடராசா இல. 47, பலாலி வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
3. கந்தையா சிறிகந்தராசா, இல 100, மணிக்கூட்டுக் கோபுர வீதி, வண்ணூர்பண்ணை தென்கிழக்கு, யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்:

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு வைகாசி மாதம் 31ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்

1985ம் ஆண்டு தைமீ 25ந்உ நீதிமன்ற ஆணைப்படி.

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

என்னுல் வரையப்பட்டது.

த. சங்கரப்பிள்ளை,
மனுகார்ன் சட்டத்தரணி.
31-5-85

காரணம் காட்டும் திகதி 19-7-85க்கு நீடிக்கப்பட்டுள்ளது

கு. குலசிங்கம்,
பதிவாளர்

4354

## தீ அணைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்திரத்துச்சந்தியிலுள்ள கடையொன்றில் நேற்றுத் தீப்பிடித்த போது யாழ்ப்பாணம் வகுப்புத் தொழிலாளர் உடன் வந்து தீயை அணைத்தனர். கட்டடத்திற்கு அதிகசேதம் ஏற்படவில்லை. (க)

## குருப் பட்டாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

கைதடி முத்துக்குமாரசாமி கோயில் பிரதம பூஷகர் குருசாமிசர்மாவின் சமய விசேஷ நிர்வாண தீக்ஷையுடன் குருப் பட்டாபிஷேகம் நாளை கைதடி முத்துக்குமாரசாமி ஆலயத்தில் நடைபெறும்.

## இந்திய...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இச்செய்தியில் ''எந்தஇ''-த்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டாலும் இச்சம்பவம் கோழைத்தனமானது, கண்டிக்கப்படவேண்டியது என்று அந்தச்செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தைகளில் இடம் பெற்ற முட்டுக்கட்டை நிலைமைகளை குறைக்கவே ரமேஷ் பண்டாரியின் விஜயம் அமைந்ததாகவும் கூறப்படுகிறது.

## பேச்சுக்களில்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தரப்பினை சேர்ந்தவர்களாகவும் ஏனைய மூவரும் ஈழ தேசிய விடுதலை முன்னணி. தமிழீழமக்கள் விடுதலைக் கழகம், தமிழர் தடுதலைக்கூட்டணி ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பார்கள்.

இந்த அறிக்கை தயாரிக்கப்படடு பூட்டான் அரசாங்கத்திடம் கையளிக்கப்படும். பின்னர் பூட்டான் அரசாங்கம் இதனை ஒரு தகுதியான வடிவில் வெளியிடும் பொறுப்பையும் ஏற்றுள்ளது பூட்டான் மாநாடு சுமார் 10 நாட்கள் வரை நடைபெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## ஈழம் கோரிக்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் பிரஸ்தாபித்துள்ளனா.

ஈரோஸ் இயக்கம் சார்பில் சங்கரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் சார்பில் வாசுதேவாவும், தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஆர். சம்பந்தனும் யுத்த நிறுத்த மீறல்கள் குறித்து எடுத்து விளக்கியுள்ளதாக கூறப்படுகிறது.

## இலங்கை பிரச்னை...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கா, தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு எதிராக மாத்திரமின்றி இலங்கைக்கு எதிராகவும் வட கொரியா வன்செயல்களில் ஈடுபட்டு வருகிறது. இலங்கையில் பதட்ட நிலையை உருவாக்குவதன் மூலம் தெற்காசியாவில் பதட்ட நிலையை தோற்றுவிக்க வட கொரியா முயன்றுவருகிறது, என்றும் அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

அமெரிக்கா வட கொரியாவின் பகைநாடு என்பது குறிப்பிடத்தக்கது.

## 643 இளைஞர்...

(1-ம பக்கத் தொடர்ச்சி)

அந்த இராணுவஅதிகாரி தெரிவித்துள்ளார் என்று யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

## கொட்டாஞ்சேனை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சோதனை செய்தனர்.

இச்சோதனையின்போது 10 பேர் விசாரணைக்காகக் கூட்டிச்செல்லப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக பெண்கள் உட்பட 6 பேரை பொலிசார் தேடிவருகின்றனர்.

இதேவேளை இந்த வெடிகுண்டுச் சம்பவத்தை தொடர்ந்து கொழும்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜனுதிபதி செயலகத்துக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது அதே போன்று ஜனுதிபதி மாளிகை பிரதம தபாலகம், கோட்டை பொலிஸ் நிலையம் ஆகியவற்றுக்கு முன்னுல் வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

முதலிகே மாவத்தை வாகன போக்குவரத்துக்கு முற்றுகவே தடை செய்யப்பட்டுள்ளது.

## நிர்வாணமாக ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாறு இன்ஸ்பெக்டர் கால்லகே என்னிடம் கூறினுர்.

கொய்யாத்தோட்டம் கருத்தரங்கு செப ஆராதனை ஆகிய நிகழ்ச்சிகள் 4-வது அனைத்துலகத்தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தவர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது

இதனைப்பற்றி காலலகே என்னிடம் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார். எக்ஸ் 6 வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் நான் விடுவிக்கப்பட்டு ஒரு நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவேன் என்று எண்ணினேன். ஒவ்வொரு நாளும் இதனை நான் எதிர்பார்த்திருந்தேன்.

வாக்குமூலத்தை அவர் சொன்னபடியே எழுதினேன். சில இடங்களில் அவர் நினைத்தபடியெல்லாம் கூறினுர். நான் அதையிட்டு கேள்விகள் எதுவும் கேட்கவில்லை. அவ்வாறு கேள்விகள் கேட்டிருந்தால் இன்று நான் உயிருடன் இருந்திருக்க முடியாது இவ்வாறு பல பயங்கர இரவுகளை நான் கழித்தேன்,

எக்ஸ்-6 வாக்குமூலம்பதிவு செய்யப்படும்போது கால்லகே தமது றிவோல்வரை ஒவ்வொரு நாளும் அந்த மேசையின்மீது வைத்திருப்பார்,

லதா மினி
(கோண்டாவில்)
10-30, 3-00, 6-45
கார்த்திக்—நளினி
நன்றி

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி
அருகாமை
தினசரி 10-30, 2-30, 6-30
ரஜனி, ரீனு நடித்த
நான் போட்ட சவால்
பயங்கர சண்டைகள்
கண்கவர் நடனங்கள்

குமரன்
மினி சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 2-30, 5-30
கமல்-ரஜனி-ஸ்ரீப்பிரியா
ஜெயசித்ரா நடித்த
ஸ்ரீதரின்
இளமை
ஊஞ்சலாடுகிறது

சோபிகா மினி
(ஹோட்டல் சோபிகா
மேல்மாடி
பஸ்நிலையம் முன்பாக)
தினசரி 10-30, 2-30 6-15
விஜயகாந் - விஜி
சங்கிலி முருகன்
சாட்சி
பயங்கர சண்டைகள்
நிறைந்த படம்

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30, 4-30 p. m.
"SPLASH"
(color)
கடல்கன்னி பெண்ணாக
மாறும் அதிசயம்.
(கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்கு மட்டும்.

மேபெயர் மினி
(கன்னுதிட்டி)
10-30 a m.
பாக்கியராஜ், ஊர்வசி,
முந்தானை முடிச்சு
2-30 p m
DEATH RIDES A HORSE
Lee van cleef
(Cowboy Film)
6 00 p m
சிவாஜி-ஜெமினி-சாவித்திரி
பாசமலர்

மொடேர்ண்
மினி சினிமா
(ஸ்ரீலங்கா அச்சகலேன்
ராஜா தியேட்டருக்கு
அருகாமை)
ROBBERS OF THE SACRED MOUNTAIN
ஹெலிகோப்டரில் திகிலூட்டும் பயங்கர துப்பாக்கிச்
சண்டைகள் நிறைந்த
விறுவிறுப்பான படம்

வெலிங்டன்
10-30 — 2-15 — 4-15
Night Shift

லிடோ சினிமா
10-30, 2-15, 5-30
கணவனை இழந்த
இளந்தாய்?
இரு ஆண் குழந்தைகள்
அவளின் இளமை அழகு?
ஒரு காமுகனிடம் சிக்கி
உயிர் துடிக்கிறுள்?
பழிவாங்கத் துடிக்கும்
இரு உள்ளங்கள்?
பாலு மகேந்திரனின்
நீங்கள் கேட்டவை
ஈஸ்ட்மன் கலர்
தியாகராஜன் (இருவேடம்
பூர்ணிமா, ஜெயராம்,
சில்க்சுமிதா, ஜெய்சங்கர்

உஷா மினி
(கே கே எஸ். வீதியில்
தினசரி 10-30, 2-30
4-30, 6-15
Debra Blee in
The Beach Girls
வயதுவந்தவர்களுக்கு
மட்டும்)

நியூ சாந்தி மினி
(யாழ்: சாந்தி சினிமாவில்)
10-30, 2-30, 4-30, 6-30
Blood Voyage
(Strictly for Adults only)
திகிலூட்டும் பயங்கர
காட்சிகள் நிறைந்த படம்

தேவி மினி சினிமா
(வின்ஸர் அருகாமை)
10-30, 2-30, 4-30, 6-30
Johone Wane, David Jassen
Green Berets
War Film

ஸ்ரான்லி மினி
5X5 திரையில்
10-30, 2-30, 6 00
ரஜனி - சுகாஷினி
நம்பியார் - அனிதாராஜ்
தேவர் பிலிம்ஸ்
தாய்வீடு

பவித்ரா மினி
(யாழ் இந்துக்கல்லூரியடி)
10-30, 2-30, 4-30, 6-30
ADVENTURE OF PLUMBER MATE
(Sex - Comedy)

பாலகன்
வீடியோ விஷன்
சாந்தி தியேட்டர் முன்பாக
தினசரி
10-30, 2-30, 6-30 9-30
விஜயகாந் - ஸ்ரீபிரியா
பார்வையின்
மறுபக்கம்

வின்ஸர்
வெண்திரையில்
தினசரி 10-30, 2-30,
இரவு 6-00
GANDHI
காந்தி அடிகள்
குறிப்பிட்ட சிலதினங்கள்
மட்டும்

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# அதிபர் ஆனந்தராஜன் மரணவிசாரணை;
# "கணவருக்கு தொலைபேசி அழைப்புவந்ததுபற்றி எனக்கு தெரியாது"
## நீதிமன்றத்தில் மனைவி சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

என் கணவர் சம்பவதினம் பிற்பகல் சபாரத்தினம் வீட்டுக்குச் செல்வதாகக் கூறிச் சென்றார். சிறிது நேரத்தில் இனந்தெரியாதவர்களினால் கணவர் சுடப்பட்டதாக அறிந்து ஆஸ்பத்திரிக்குச்சென்றேன். அங்கு அவசர சிகிச்சை நடைபெற்றுக் கொண்டிருந்ததால் வீடு வந்தபோது அவர் இறந்துவிட்டதாக அறிந்தேன்.

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் சி ஈ. ஆனந்தராஜனின் மரணவிசாரணையில் சாட்சியமளித்த அவர் மனைவி திருமதி ஆனந்தராஜன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் நேற்றுக்காலை விசாரணை நடைபெற்றது.

திருமதி ஆனந்தராஜன் மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது இறந்தவர் எனது கணவர். யாழ. சென் ஜோன்ஸ் கல்லூரி வளவிலுள்ள இல்லத்தில் வசித்து வந்தோம். கடந்தமாதம் 26-ம்தேதி வீட்டிலிருந்தோம். பிற்பகல் கணவனுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பிற்பகல் 4 மணியளவில் கணவர் றக்காவீதியிலுள்ள சபாரத்தினம் வீட்டிற்கு போவதாக கூறிவிட்டுச் சென்றார். இளைப்பாறிய மேலதிக அரசாங்க அதிபர் தான் திரு. சபாரத்தினமாகும்.

பிற்பகல் 5 மணிபோல் வீட்டில் இருக்கும்போது என் கணவனை இனந்தெரியாதவர்கள் சுட்டுப்போட்டதாகவும், அவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டதாகவும் தகவல் கிடைத்தது.

நான்ஆஸ்பத்திரிக்குச்சென்றபோது அவசர சிகிச்சை நடந்தது. பின்பு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன் பின் அவர் இறந்துவிட்டதாக அறிந்தேன்.

நான் அறிந்த அளவில் என் கணவனுக்கு பகைவர்ஒருவரும் இல்லை.

விசாரணை இம்மாதம் 15-ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

---

### அநு. புரத்துக்கு நியமிக்கப்பட்ட——
# ஆசிரியர்களுக்குமுல்லைத்தீவு கிளிநொச்சியில் நியமனம்

(கொழும்பு)

ருகம, மஹரகம, அளுத்கம ஆகிய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் ஆசிரியர் முன்சேவைப் பயிற்சியை முடித்துக்கொண்டு அநுராதபுரம்மாவட்டத்தில் ஆசிரியர்களாகநியமிக்கப்பட்டதமிழ்ஆசிரியர்களுக்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் பதவி நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் இவர்கள் அநுராதபுரம்சென்று சேவையாற்ற முடியாது என்பதினால் இவர்களுக்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் சேவையாற்ற அனுமதிப்பது என கல்விச் சேவைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த தீர்மானத்துக்கமைய இந்த தமிழ் ஆசிரியர்கள் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு சென்று பதவிஏற்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக்கடிதமும், பதவி ஏற்கும் திகதியும் கடிதம் மூலம் விரைவில் அறிவிக்கப்படுமென்று கல்விச் சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் தெரிவித்தார்.

---

# "பூட்டான் பேச்சுக்களினால் இளைஞர்கள் விடுவிக்கப்படவில்லை"
## பாராளுமன்றத்தில் 'லலித்'

(கொழும்பு)

பூட்டான் மாநாட்டு பேச்சுவார்த்தைகளுக்கும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களின் விடுதலைக்கும் எவ்விதமான தொடர்புமில்லை என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

பூட்டான் மாநாட்டில் மாகாண சுயாட்சி வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன் காரணமாகவே இளைஞர்கள் விடுதலைசெய்யப்பட்டார்கள் என்றும் பொதுவாகக் கூறப்படுறதே என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில், இந்த இளைஞர்கள் மீது விசாரணை நடத்தப்பட்டு அவர்கள் எவ்வித குற்றமுமற்றவர்கள் என்று தெரிந்து கொண்ட பின்னரே அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் சகல தீவிர வாதக்குழுக்களும் பங்கெடுக்கவில்லை. இதனால் சில குழுக்கள் தமது செயற்பாடுகளைத் தொடர்ந்து கொண்டிருக்கலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

---

# தலைமன்னார் கடலில் ரூபா 7 லட்சம் கடத்தல் பொருட்கள் பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு கடத்திச் செல்ல முயன்றதாகக் கூறப்படும் 7 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை தலைமன்னாருக்கு அண்மையில் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

தலைமன்னாருக்கு அண்மையில் ஆழ்கடலில் வைத்து கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 2 வள்ளங்களில் 2669 சேலைகள், 7 ஆயிரம் டசின் 'ஷிப்'கள் 934 யார் காற்சட்டைதுணி, 4 வீடியோ டெக் இருந்தனவாம்.

இக்கடத்தல் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய யாழ்.சுங்க உதவிக் கலக்டர் திரு. எஸ். கணேசன் அப்பொருட்களை பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டார்.

---

## கடத்தப்பட்ட இளைஞர்கள் விடுதலை

(வவுனியா)

வவுனியாவில் அண்மையில் கடத்தப்பட்ட நான்கு இளைஞர்களும் விடுதலைசெய்யப்பட்டுளளனர்

விசாரணைக்காகவே அழைத்துச்செல்லப்பட்டதாகக் கூறப்படும் இளைஞர்கள் புத்திமதி வழங்கிய பின்னர் விடுவிக்கப்பட்டனராம்.

---

# கல்வி வரலாற்றில் இன்று தாழ்வான நிலை!
## பல்கலைக்கழக ஆசிரியர் கவலை

(மாவிட்டபுரம்)

''எமது கல்வி வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும்போது தற்போது கல்விநிலையில்என்றுமில்லாதபடி தாழ்வான நிலை ஏற்பட்டுள்ளது. கல்வியில் அக்கறை கொள்ள வேண்டிய இளஞ்சந்ததியினர் வேறு துறைகளில் ஈடுபட நேர்ந்துள்ளது. எம்படியிருந்த போதும் நமது இளஞ்சந்ததியினர் கல்வியிலும் அதிக அக்கறை கொள்ள வேண்டும்''

இவ்வாறு கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலய பரிசளிப்பு விழா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற சமயம் சிறப்பு விருந்தினராகக் கலந்துரையாற்றிய யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு நா. சுப்பிரமணியம் கூறினார்.

அதிபர் திருமதி த. இராமசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:-

''கல்வி நிலை உயர்வதற்கு ஆசிரியர்கள், மாணவர்கள் பெரும் பங்கு ஆற்ற வேண்டும். ஆசிரியர்கள் ஒழுக்கத்தைபேணி மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக திகழவேண்டும். அத்துடன் துணிவு, கடும் முயற்சி ஆகியனவும் ஆசிரியர்கள் மாணவர்களிடையே இருக்கவேண்டும். அப்போது தான் கல்வி நிலை உயரமுடியும்'' என்றார்

மற்றும் வட்டாரக் கல்வியதிகாரி திரு பி சிவஞானசுந்தரம்' இளைப்பாறிய கிராம சேவகர் திரு சு. கனகசபை ஆகியோரும் உரையாற்றினர்.

முன்னாள் அதிபர் திரு வ. கந்தையாவின் நினைவு பேருரையை யாழ். கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த திரு. வ. நடராசா நிகழ்த்தினார்.

கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

---

## தபால்நிலையம் இயங்குகிறது

(மாவிட்டபுரம்)

கடந்த 6 மாதங்களுக்கு மேலாக பூட்டப்பட்டிருந்த காங்கேசன்துறை தபால் நிலையம் நேற்று முன்தினம் முதல் மீண்டும் திறக்கப்பட்டு செயல்பட ஆரம்பித்துள்ளது.

முத்திரை, காசுக்கட்டளை. பதிவுத்தபால் ஆகிய வேலைகளே தற்போது நடைபெறுமெனவும் கொடுக்கல் வாங்கல்கள் மட்டுப்படுத்தப்பட்டிருக்குமெனவும் தபால் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

---


## மரண அறிவித்தல்
### நாகநாதர் கணபதிப்பிள்ளை

நயினாதீவு நாகநாதர் கணபதிப்பிள்ளை காலமாகிவிட்டார். அன்னார் சி எஸ் கே. மில் இளைப்பாறிய கணக்கப்பிள்ளையும், நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபை ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும், அதன் பொருளாளரும், கண்மணியின் அன்புக் கணவரும், நாக சண்முகநாதபிள்ளை (அதிபர், மகாவித்தியாலயம் நயினாதீவு), நாக சிவராமலிங்கம் (ஆசிரியர், ஒஸ்மானியா கல்லூரி, யாழ்ப்பாணம்), நாக. குமாரசூரியர் (தபாலகம் நயினாதீவு), திருமதி மணிமேகலைராணி சிவபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மாசினிதேவி சண்முகநாதபிள்ளை, பரமேஸ்வரி சிவராமலிங்கம், காந்திமலர் குமாரசூரியர், தி. சிவபாலன் (ஆசிரியர், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [13-07-85] சனிக்கிழமை பிற்பகல் 4 00 மணி அளவில் நயினாதீவில் நடைபெறும்.

தகவல்: க. சிவராமலிங்கம் நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

4411



## மரண அறிவித்தல்
### திருமதி பிலோமினா தம்பிநாயகம்

திருமதி பிலோமினா தம்பிநாயகம் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற திரு. அகஸ்ரீன் தம்பிநாயகத்தின் அன்பு மனைவியும், இம்மானுவேல், அஞ்சலா, லீயோ, கமலா, யோண் பப்ரிஸ்ற், சரோ ஆகியோரின் அன்புத் தாயாரும், மேரிபிலோமினா, விக்ரர் பொன்னையா, செல்வராணி, இங்பொனிபாஸ், தசியந்தி, ஜோர்ஜ் பொன்னையா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 13-07-85 சனிக்கிழமை மாலை 4-00 மணியளவில் பரி. கொஞ்சேஞ்சி மாதாவின் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: சிறில் இம்மனுவேல்
177/1, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

4414


---

## பீலிக்ஸ் மறைவுக்கு அனுதாபம்

(கொழும்பு)

முன்னாள்நிதியமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயககாவின்மறைவுக்கு பாராளுமன்றத்தில்நேற்று அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

இந்த அனுதாபத்தீர்மானம் மீது பாராளுமன்ற விவகார அமைச்சர் வின்சன்ட் பெரேரா, நீதியமைச்சர் நிசங்கா விஜயரத்தின, எதிர்கட்சித் தலைவர் அநுரா பண்டாரநாயக்கா, மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோர் பேசினர்.

இறக்கும்போது இலங்கைப் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டிருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தமக்கு பாராளுமன்றத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டாம் என்று 'உயில் எழுதி வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

---


## மரண அறிவித்தல்
### சீனிவாசகம் சின்னத்துரை

சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த பிரபல தரகர் சீனிவாசகம் சின்னத்துரை அகால மரணம் அடைந்தார். அன்னார் அன்னபாக்கியத்தின் அன்புக் கணவரும், தவமணி, புஸ்கலாதேவி, யசோதா, வசந்தகுமார் (Baharin), பாலச்சந்திரன் (Baharin), தர்மராசா, காலஞ்சென்ற ஸ்ரீபாலகிருஷ்ணன், ரஞ்சினிதேவி, குமுதா ஆகியோரின் அன்புத் தந்தையும் தட்சணாமூர்த்தி (கன்னியா தபால் நிலையம்), விக்கினேஸ்வரன் செல்வநாயகம் (சுன்னாகம் தபால் நிலையம்), திலகரத்தினம், மாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், வாசுதேவன், மலர்ச்செல்வி, சைலா, லதாநந்தன், ரகு, மதனிகா, துஷ்யந்தன், மதன், செல்வரஞ்சன், ஜனார்த்தனன், மயூரன் ஆகியோரின் பேரனுமாவர். அன்னாரின் பூதவுடல் 13-07-85 சனிக்கிழமை மாலை 2-30 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

4416


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone; 22389 ,24126;